28.01.2025 - செவ்வாய்க்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 79 குரோதி வருடம் தை மாதம் 15 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 28 பக்கங்கள் - 12




## விமானப்படை தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க



செய்தி 2ஆம் பக்கம்

## புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மீளாய்வு பெப்.06 வரை

(முகம்மட் முக்தார்)

கடந்த வாரம் வெளியிடப்பட்ட தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் தொடர்பான மீளாய்வுக்கான விண்ணப்பங்களை பெப்ரவரி 06 வரை இணையவழி ஊடாக சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பெறுபேறுகளை மீள் பரிசீலனைக்காக இணையவழி முறைமையின் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் எனவும் 02

# உயிரைப் பணயம் வைத்து பயணம் செய்யும் கிரான் மக்கள்





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் பிரதேச செயலகப் பிரிவில் அடைமழை மற்றும் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக அப்பகுதி மக்கள் இரண்டு வாரங்களாக அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவசர தேவைகளுக்காக உயிரை பணயம் வைத்து நகருக்கு வரவேண்டியுளளதாகவும் அங்க லாய்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த சில நாட்களாக 02

# நாமல் எந்நேரமும் கைதாகலாம்



(கனூஷியா புஷ்பகுமார்)

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை கைது செய்ய தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

2029ஆம் ஆண்டில் நாமல் ராஜபக்ச இந்நாட்டு ஜனாதிபதியாக ஆட்சியமைப்பார் என்ற பாரிய அச்சம் அரசாங்கத்திற்கு உள்ளதாகவும் அதன் காரணமாக அவரை சிறையில் அடைக்க முயற்சித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி கவிழும் அளவுக்கு ராஜபக்சர்கள் மீதான அச்சம் அவர்களிடம் தலைதூக்க ஆரம்பித்துள்ளதாக கூறிய அவர், இவ்வாறான காரணங்களால் ராஜபக்சர்களை குறிவைத்து வேட்டையாடும் செயற்பாடு இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் மகன் யோஷித ராஜபக்சவை நேற்று (27) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயங்களை தெரிவித்தார். 02

## மக்கள் பிரச்சினையை தீர்க்காமல் அரசியல் பழிவாங்கலில் தீவிரம்

நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் காலத்தை செலவிட வேண்டிய அரசாங்கம் அரசியல்வாதிகளையும் அவர்களின் குடும்பத்தினரையும் பழிவாங்கிக் கொண்டிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சிகளை ஒழித்து தங்களது அரசியலை நடத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்பது தெளிவாவதாகவும் நாமல் ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.



முன்னாள் ஜனாதிபதி யோஷித ராஜபக்சவை நேற்று (27) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு 02

## மற்றுமொரு அமைச்சரின் 'பேராசிரியர்' பட்டமும் நீக்கம்!

(கனூஷியா புஷ்பகுமார்)

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்னவின் பெயருக்கு முன்னால் இருந்த "பேராசிரியர்" என்ற பட்டத்தை எந்தவொரு ஆவணத்திலும் குறிப்பிட வேண்டாம் என அவ் அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் (நிர்வாகம்) அமைச்சின் பிரிவுத் தலைவர்களுக்கு எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளார். 02

## மனுஷவை கைது செய்வதற்கு ஆதாரம் இல்லை : CID

(கனூஷியா புஷ்பகுமார்)

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்புவதாகக் கூறி திசர நாணயக்கார மூலம் பணம் வசூலித்த சம்பவம் தொடர்பில் மனுஷ நாணயக்காரவை கைது செய்ய போதுமான உண்மைகள் இல்லாததால், இந்த விடயத்தில் அவரைக் கைது செய்ய எதிர்ப்பார்க்கவில்லை என நிதிக் குற்றப் பிரிவு சார்பில் முன்னிலையான குற்றப் புலனாய்வுத் துறை பொலிஸ் 02

## சுதந்திர தினத்தை கரிநாளாக்கி வடக்கு கிழக்கில் பாரிய போராட்டம்

(பு.கஜிந்தன்)

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கறுப்பு நாளாக நினைவு கூர்ந்து தமிழ் மக்களின் வலிகளையும் உணர்வுகளையும் உலகுக்கு மடுமல்லாமல் அரசாங்கத்துக்கும் எடுத்துக் கூறுவதற்கு 02




## காஸா திரும்பும் பல்லாயிரம் பலஸ்தீன மக்கள்



### வீதித் தடைகளை திறந்தது இஸ்ரேல்



போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து இஸ்ரேல் வீதித் தடைகளைத் திறந்ததால், நேற்று(27) பல்லாயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் காஸாவின் வடக்கே 02

## அரச சேவை: 30,000 வெற்றிடங்களை உடன் நிரப்ப தீர்மானம்

(கனூஷியா புஷ்பகுமார்)

அரசாங்க சேவையில் உள்ள 30,000 அத்தியாவசிய வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாண்டு வரவுசெலவுத் திட்டத்தில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஆலோசனையின் கீழ், அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படை சம்பள அதிகரிப்புக்கான திட்டங்களை முன்வைக்கவும், ஓய்வூதியதாரர்களின் சம்பள முரண்பாடுகளை மூன்று ஆண்டுகளுக்குள் முடிவுக்குக் கொண்டுவரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இது தொடர்புடைய நிதி ஒதுக்கீடு 02

## மீனவர் கைதை தடுக்க தூதரக மட்டத்தில் நடவடிக்கை வேண்டும்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)



இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை தனுஷ்கோடி அருகே கடந்த 25ஆம் திகதி இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய 02

## கொழும்பில் நாளை 29 முதல் விசேட போக்குவரத்து ஏற்பாடு

இலங்கையின் 77வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் பெப்ரவரி 04ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதை முன்னிட்டு கொழும்பு போக்குவரத்து பிரிவு விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 29 முதல் பெப்ரவரி 02 வரை சுதந்திர தின விழா ஒத்திகை நடத்தப்படுவதால் கொழும்பு சுதந்திர சதுக்கத்தை சூழ இந்த காலப்பகுதியில் காலை 06.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை 02

## எம்.எச்.எம். அஷ்ரபின் வீடு தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு



(முகம்மட் முக்தார்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காலம் சென்ற எம்.எச்.எம்.அஷ்ரபின் ஒலுவில் இல்லம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 02

## ஐக்கிய இராச்சியத்தின் தூதுக் குழு எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு

ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசுபிக் பிராந்திய அமைச்சர் கெத்தரின் வெஸ்டருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட சந்திப்பொன்று நேற்று (27) கொழும்பில் நடைபெற்றது.



இச்சந்திப்பில், ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசுபிக் பிராந்திய அமைச்சர் கெத்தரின் வெஸ்டின் பிரத்தியேக செயலாளர் ரோப் கோர், 02

# சந்தையில் தரமற்ற பென்சில்கள்: பெற்றோர்கள் அவதானம் தேவை

(கனூஷியா புஷ்பகுமார்)

புதிய பாடசாலை தவணைக்கான புத்தகப் பட்டியலை தயாரிக்கும்போது தரமான பாடசாலைப் பொருட்களைப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துமாறு இலங்கை அதிபர்கள் சங்கம் வலியுறுத்துகிறது.

சந்தையில் குழந்தைகளின் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற பென்சில்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக அச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பியசிறி பெர்னாண்டோ சுட்டிக்காட்டுகிறார்.

இதுபோன்ற பென்சில்கள் மற்றும் வர்ண பென்சில்களைப் பயன்படுத்துவதால் குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் ஆரோக்கியத்தில் ஏற்படும் எதிர்மறையான தாக்கம் குறித்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் கரிசனைகொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது இத தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

”பென்சில்கள் தயாரிக்கும் போது அவற்றின் மேற்பரப்பில் பயன்படுத்தப்படும் வர்ணப்பூச்சுக்கு சர்வதேச தரநிலைகள் உள்ளன. அதற்கு அமைவான தரமான பென்சில்களைப் பயன்படுத்துவது குழந்தைகளுக்கு பாதுகாப்பானது என்பதை அது உறுதி செய்கிறது.

உதாரணமாக, ஐரோப்பிய குழுவால் பரிந்துரைக்கப்பட்ட CN அல்லது EN 71 போன்ற தரநிலைகள் கொண்ட பென்சில்கள் பாதுகாப்பானவை என்பதை உறுதி செய்கின்றன. இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற பென்சில்களில் கன உலோகங்கள் இருந்தால், அவை குழந்தைகளின் உடலில் நுழையக்கூடும். இது குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். தரம் குறைந்த பென்சில்களின் முனைகள் பெரும்பாலும் விரைவில் உடையும் தன்மைகொண்டவை ஆகும்.

இது போன்ற விடயங்கள் குழந்தைகளின் கற்றலையும் பாதிக்கின்றன. இந்நாட்களில் புத்தகப் பட்டியல்களைத் தயாரிக்கும் ஆசிரியர்கள், இந்த விடயங்களைப் பற்றி பெற்றோருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தரமான பாடசாலைப் பொருட்களை வழங்குவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.” எனத் தெரிவித்தார்

## விமானப்படை தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் விமானப்படையின் புதிய தளபதியாக எயார்வைஸ் மார்ஷல் வாசு பந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று (27) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

விமானப்படையின் 20 ஆவது தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க வரலாற்றில் இணைகிறார்.

ஜனவரி 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதோடு தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, எதிர்வரும் 29 ஆம் திகதி பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

வீர விக்கிரம விபூஷன, ரண விக்கிரம பதக்கம், ரண சூர பதக்கம் ஆகிய மூன்று விருதுகளையும் ரணசூர பதக்கத்தையும் எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க பெற்றுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### கொழும்பில் நாளை...

விசேட போக்குவரத்து திட்டங்கள் அமுலில் இருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒத்திகை மற்றும் சுதந்திர தின கொண்டாட்டங்களை கருத்தில் கொண்டு சுற்றுவட்டாரத்தில் பல சாலைகள் மூடப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

### எம்.எச்.எம். அஸ்ரபின் வீடு...

மறைந்த அஷ்ரபின் மகனான அமான் அஸ்ரப், மனைவி முன்னாள் அமைச்சர் பேரியல் அஸ்ரப் ஆகியோரினால் மேற்படி வீடு தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உப- வேந்தர். யூ.எல்.ஏ.மஜீட்டிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி வீடு மர்ஹூம் அஸ்ரபுக்காக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மறைந்த நூஹு லெப்பையால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த அஸ்ரபின் மறைவுக்கு பின்னர் கடந்த 25 வருடமாக காடுமண்டி கைவிடப்பட்ட நிலையில் அவ்வீடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நாமல் எந்நேரமும்...

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ச கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை காலை பெலியத்த அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

பண மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ச, சுமார் 4 மணி நேரம் விசாரணையைத் தொடர்ந்து கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், 27ஆம் திகதி (நேற்று) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வுத் துறையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட யோஷித ராஜபக்ஷ, நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அதன்படி, அவரை பிணையில் செல்ல நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்டதில் ஜனாதிபதிக்கோ அல்லது பொது பாதுகாப்பு அமைச்சருக்கோ எந்த தொடர்பும் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

### மக்கள் பிரச்சினையை...

கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச,

“சட்டத்தை செயல்படுத்துவது தவறு அல்ல. எனினும், பெலியத்த அதிவேக நெடுஞ்சாலை வரையில் சென்று கைது செய்தது ஒரு வீண் செயல். எங்களிடம் கேட்டிருந்தால் நாங்களே நேரில் வந்து வாக்குமூலத்தை வழங்கியிருப்போம்.

அமைச்சர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் பற்றி பேசுகிறார்கள், ஜனாதிபதியின் வாகனங்கள் குறைக்கப்பட்டமை தொடர்பில் பேசுகிறார்கள். அப்படியெனில் ஏன் இதற்காக எரிபொருளை விரயம் செய்து கொண்டு பெலியத்த வரையில் செல்ல வேண்டும்?

அரசியல் வேட்டையாடல்களை நிறுத்தி விட்டு அரிசி, தேங்காய்களுக்கு நிலவும் தட்டுப்பாடு மற்றும் மூன்று வேளை உண்ணக் கூடிய விதத்தில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதில் அரசாங்கம் அவதானம் செலுத்தினால் நல்லது என தெரிவித்தார்.

நாங்கள் ஏதேனும் குற்றம் செய்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் நிரூபித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என அரசாங்கத்திடம் கூற விரும்புகிறேன் என குறிப்பிட்ட அவர் இவ்வாறான விடயங்களை அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்த வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

மேலும், தங்களுடைய அரசாங்கத்தில் இது மாதிரியான அரசியல் பழிவாங்கல்களுக்கு இடமளிக்க மாட்டோம் என அவர் தெரிவித்தார்

### புலமைப்பரிசில் பரீட்சை..

பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை(23) வெளியிடப்பட்டன.

அதற்கமைய, பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை 27ம் திகதி முதல் பெப்ரவரி 06 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மாத்திரம் சமர்ப்பிக்கலாம் எனவும் பெற்றார் சமர்ப்பிக்க முடியாது எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

### உயிரைப் பணயம்...

அடைமழை பெய்து வந்தது. இதனால் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை இரண்டு வாரங்களாக தங்களது பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவசர தேவைகளுக்காக உயிரை பணயம் வைத்தே திங்கட்கிழமை(27) வரை கிரான் நகருக்கு வந்து செல்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களுக்குமுன் இரண்டு விவசாயிகள் நகர்புறத்திற்கு வந்து பொருட்களைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பும் போது காட்டு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர். இருப்பினும் அரசாங்கத்தினால் படகுப்பாதை சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் ஆபத்தான வீதிகளில் பயணம் செய்து மிகவும் சிரமப்படுவதை தற்போதும் காணக் கூடியதாக உள்ளது.

அப்பகுதியில் இராணுவத்தினர் மனிதாபிமான உதவிகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் மிகவும் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது. இரவு வேளைகளில் தங்களுக்கு மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்த எந்தவித போக்குவரத்துகளும் இன்றி தாம் கஷ்டப்படுவதாகவும் காட்டு யானை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மிகவும் ஆபத்தான வாழ்க்கையை அவர்கள் தற்போதும் வாழ்ந்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்

### மற்றுமொரு அமைச்சரின்...

சந்தன அபேரத்னவின் பெயருக்கு முன்னால் இதற்கு முன்னர் “பேராசிரியர்” என்ற பட்டம் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், அந்தப் பட்டம் அமைச்சின் வலைத்தளத்திலும் காட்டப்பட்டிருந்ததாகவும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, சந்தன அபேரத்ன பேராசிரியர் பதவியை வகித்தாலும், தற்போது அவர் பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால், பேராசிரியர் பட்டம் பயன்படுத்தப்பட முடியாது என்றும், எனவே கலாநிதி பட்டம் மட்டுமே பெயருக்கு முன்னால் பயன்படுத்தப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிருஷாந்த அபேசேனவின் பெயருக்கு முன்னால் இருந்த பேராசிரியர் பட்டமும் சமீபத்தில் நாடாளுமன்ற வலைத்தளத்திலிருந்து நீக்கப்பட்டது.

இது கிருஷாந்த அபேசேன அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் நீக்கப்பட்டது. ஒரு விசேட வைத்தியரான அவர், சிறிது காலம் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பேராசிரியர் பட்டம் பெற்ற ஒரு பேராசிரியர் பல்கலைக்கழகப் பணியை விட்டு வெளியேறிய பிறகு அந்தப் பட்டத்தைப் பயன்படுத்த முடியாது என்றும் பல்கலைக்கழக ஆணைக் குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

### மனுஷவை கைது...

அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதன்படி, ஜனவரி 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு முன்னாள் அமைச்சர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி, சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பார் என்று மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

நிலுவையில் உள்ள பிணை மனுவை பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி விசாரிப்பதற்காக திகதி கம்பஹா நீதவான் மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

மனுதாரர் மனுஷ நாணயக்கார சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்திரதிஸ்ஸ தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

### சுதந்திர தினத்தை...

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இறுதி யுத்த காலப்பகுதியில் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின் சங்க உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்தனர். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே

அந்த சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டி, அதற்கு சர்வதேச நாடுகள் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக வாழும் உறவுகள் தொடர்ந்து போராடிவருகின்றனர். ஆனால் இதுவரை எதுவிதமான தீர்வுகளும் கிடைக்கப்பெறவில்லை.

சுமார் 18 ஆயிரத்துக்கும் அதிகமான உறவுகள் காணாமலாக்கப்புடுள்ளனர். இது தொடர்பில் பல்வேறு வகையில் வடக்கு கிழக்கெங்கும் எமது சங்கம் போராட்டங்களை முன்னெடுத்து எமது வலிகளை வெளிப்படுத்தியிருந்தது.

இதே நேரம் இக்காலப் பகுதியில் நீதிவேண்டி போராட்டத்தை முன்னெடுத்த உறவுகளின் அன்னையர்கள் 300 இற்கும் அதிகமானோர் தமது அபிலாசைகளை எட்டாது இறத்துவிட்டனர்.

ஆனால் தீர்வு தருகின்றோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றும் தமது இயல்பான போக்கையே தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன. ஆனால் எமது மக்களுக்கு எதுவித தீர்வுகளோ நன்மைகளும் கிடைக்கவில்லை.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் எமது மக்களுக்கு இன்னமும் அதன் பலாபலன்கள் கிடைக்கவில்லை. இவ்வாறான பின்னணியில் வரவுள்ள இலங்கையின் 77 ஆவது சுதந்திர நாளை கரி நாளாக அனுஸ்டிக்க அழைப்பு விடுக்கின்றோம். இந்த எதிர்ப்பு நாளை வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது இந்த போராட்டத்துக்கு பல்கலைக்கழகம், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், பொது போக்குவரத்து மற்றும் அனைத்து தரப்பினரும் அதரவளிக்குமாறும் அழைப்பு விடுக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மாற்றங்கள் நிகழுமென்று கூறி மாறிமாறி வந்த அரசுகளால் வேதனைகளை தவிர வேறெதுவும் இதுவரை தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. மாறாக சிங்கள குடியேற்றங்களுக்கான முஸ்தீபுகளையே திரைமறைவில் முன்னெடுத்து வருகின்றது என வடக்கு கிழக்கு பெண்கள் வலையமைப்பு தலைவி ஜெயானந்தன் ஜெயச்சித்ரா குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்றுவரை அடக்கு முறைகளும், அடாவடிகளுமே எமது இனத்துக்கெதிராக நடந்தேறுகின்றன. அதைவிட தமது இனப் பரம்பலை வடக்கு கிழக்கிலும் வலுவாக்க கடந்த அரசுகளை விட இந்த அரசு முனைப்புடன் செயற்படுகின்றது.

இதற்காக மகாவலி விரிவாக்கல் என்ற குறியீட்டுடன் சிங்களவர்களை குடியமர்த்த மும்முரமாக செயற்படுகின்றது. இதை ஏற்க முடியாது. அதுமட்டுமல்லாது இந்த அநுர அரசும் சிறைகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியுள்ளது.

அநுர அரசின் இந்த செயற்பாடானது கடந்த கால அரசின் கொள்கையை முன்னெடுப்பதாகவே இருக்கின்றது. அந்த வகையில் அனுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது.

எனவே அநுர அரசின் இத்தகைய போக்கை கண்டித்து வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர நாளை கரி நாளாக கடைப்பிடிப்பதற்கு அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

### காஸா திரும்பும்...

செல்லும் முக்கிய வீதிகளில் சொந்த நாட்டிற்கு திரும்பினர்.

மத்திய காஸாவின் முதல் கடக்கும் இடம் காலை 7.00 மணிக்கு திறக்கப்பட்ட பின்னர், முதல் குடியிருப்பாளர்கள் அதிகாலையில் காஸா நகரத்திற்கு சென்றடைந்ததாக வெளிநாட்டு செய்திச் சேவைகள் தெரிவித்தன. மற்றொரு கடவை காலை 9.00 மணிக்கு திறக்கப்பட்டது. கடவைகள் திறக்கப்படும் என்ற செய்தி வழங்கப்பட்டதையடுத்து நேற்று ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்குமிடங்களிலும் கூடார முகாம்களிலும் ஆரவாரம் செய்தனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ், வடக்கு காஸாவில் வசிப்பவர்கள் வார இறுதியில் திரும்பிச் செல்லவிருந்தனர், ஆனால் இஸ்ரேல்–ஹமாஸ் பொதுமக்களை பணயக்கைதியாக இருந்த இஸ்ரேலிய பெண்ணொருவரை விடுவிக்கத் தவறியதன் மூலம் ஒப்பந்தத்தை உடைத்துவிட்டதாக தெரிவித்தது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திங்கட்கிழமை காலை முதல் பலஸ்தீன பகுதியின் வடக்கில் இடம்பெயர்ந்த காஸா குடும்பங்களுக்கு இஸ்ரேல் அனுமதிக்கும் என எக்ஸ் வலைத்தள பதிவில் தெரிவித்தார். இதையடுத்து நேற்று ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் காஸா நோக்கி திரும்பினர்.

### அரச சேவை:...

செய்வதற்கான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும்.

எதிர்வரும் ஜுன் மாதத்திற்குள் பொது சேவைக்கான துல்லியமான தரவு அமைப்பைத் தயாரிக்க ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களின் பேரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர்.

தற்போதுள்ள அரச பொது சேவையில் பொதுமக்கள் திருப்தி அடையாததால், அரசு சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் பொது மக்களுக்கு திறமையான சேவைகளை வழங்க அரசாங்கம் நம்புகிறது.

### மீனவர் கைதை தடுக்க...

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு ஞாயிற்றுக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது :

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படும் மற்றொரு சம்பவத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள முதல்வர், 25.01.2025 அன்று ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை (தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் மற்றும் கேரளாவைச் சேர்ந்த 2 மீனவர்கள்) தனுஷ்கோடி அருகே அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்று கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் அடிக்கடி சிறைபிடிக்கப்படும் சம்பவங்கள், கடலோர மீனவ சமுதாயத்தினரிடையே பதற்றத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்துவதோடு அவர்களது எதிர்காலத்தை நிச்சயமற்றதாகவும், இருண்டதாகவும் ஆக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே நமது மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதை தடுக்க உறுதியான தூதரக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

### ஐக்கிய இராச்சியத்தின்....

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்ஸ், பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் அலெக்சாண்டர் ஸ்மித் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ–பசுபிக் பிராந்திய அமைச்சர் கெத்தரின் வெஸ்ட் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரிடையே இந்நாட்டின் பல்வேறு பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றன.

இந்நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும், சுற்றுலாத் துறை தொடர்பாக ஐக்கிய இராச்சிய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இந்த தூதுக்குழுவினரிடம் கேட்டுக் கொண்டார்.

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு

# உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்மாடி குடியிருப்புகள்

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன

தோட்டத் தொழிலாளர்களுக்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட தொடர்மாடி வீட்டுத் தொகுதியை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார். பெருந்தோட்ட சமூகத்தின் வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பெருந்தோட்ட மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளையுடன் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மலைப்பகுதிகளில் மண்சரிவு அபாயம் அதிகமாக இருப்பதாகவும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மூலம் நிலச்சரிவுக்கு உள்ளாகாத தோட்ட நிலங்களை அடையாளம் கண்டு, அந்த நிலங்களில் தொடர்மாடி கட்டிடங்கள் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயம் மற்றும் வீட்டுவசதி பெற்றுக் கொடுப்பதற்காக தோட்டப்புறங்களில் காணி பற்றாக்குறை காரணமாக அவர்களின் வீட்டுவசதி பிரச்சினைக்கு தீர்வாக இந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். இந்த அடுக்குமாடி கட்டிடத் திட்டம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்படும் என்றும்,அதில் பாலர் பாடசாலைகள் குழந்தைகளுக்கான கற்றல் மையங்கள் , கூட்டுறவு மற்றும் மதம் தொடர்பான மையங்களும் அமையவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு பிரதியமைச்சர்



சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, பெருந்தோட்ட மனித மேம்பாட்டு அறக்கட்டளையின் அனைத்து மாவட்டத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# வழக்குகளை விரைவாக முடிவுறுத்த பொலிஸாரின் கரிசனை அவசியம்

## திருமலை நீதவான் ஜீவராணி

**(அப்துல்சலாம் யாசீம்)**

மக்களை அலட்சியப்படுத்தாமல் வழக்குகளை மிக விரைவாக முடித்துக் கொடுப்பதற்கு பொலிஸார் மும்முரமாக செயல்பட வேண்டும் என திருகோணமலை நீதிமன்ற நீதவான் கருப்பையா ஜீவராணி பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மொரவெவ சுற்றுலா திறந்த நீதிமன்றத்தில் நேற்று (27) குறித்த அறிவுறுத்தலை அவர் வழங்கியுள்ளார்.

வழக்காளிகள் மிகவும் கஷ்டப்பட்டு உரிய நேரத்திற்கு வழக்குகளுக்காக வருகின்ற போது அவர்களை அலட்சியப்படுத்தாமல் வழக்குகளுக்குரிய ஆவணங்களை விரைவாக மன்றிற்கு சமர்ப்பித்து வழக்குகளை மிக விரைவாக முடிவுறுத்திக் கொடுப்பதற்கு பொலிஸார் செயற்பட வேண்டுமெனவும், வழக்குகளில் சாட்சியாளராக காணப்படுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் உரிய வழக்கு தினத்தன்று சமுகமளிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

சாட்சியாளராக காணப்படும் பொலிஸார் வழக்கு தினத்தன்று வராவிட்டால் வழக்கிற்கு வருகின்ற அப்பாவி மக்கள் தமது கூலித் தொழில்களை விட்டுவிட்டு வருவதினால் இன்னும் நஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதனால் பொலிஸார் சிவில் மக்கள் தொடர்பில் கரிசினை காட்டுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

# டெங்கு நோய் தீவிரம் 4,044 நோயாளர்கள் பதிவு

2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 4,044 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் 614 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது. கடந்த 3 வாரங்களில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய, 19 சுகாதார அதிகாரி பிரிவுகள் அதிகளவில் டெங்கு பரவல் அபாயமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.



மூதூர் பிரதேச சபையின் புதிய செயலாளராக எம்.ஐ.எம்.ஜம்சித் நேற்று திங்கட்கிழமை (27) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி, மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**(எம்.என்.எம்.புஹாரி)**

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்:** இன்று நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள்.

**ரிஷபம்:** இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும்.

**மிதுனம்:** இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும்.

**கடகம்:** இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

**சிம்மம்:** இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

**கன்னி:** உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள்.

**துலாம்:** இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

**விருச்சிகம்:** இன்று அதிகப் பணிகள் காணப்படும்.

**தனுசு:** இன்று நீங்கள் பதட்டமான மனநிலையில் இருப்பீர்கள்.

**மகரம்:** இன்று நீங்கள் பதட்டமான மனநிலையில் இருப்பீர்கள்.

**கும்பம்:** இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள்.

**மீனம்:** பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று இரவு 08:09 வரை சதுர்த்தசி பின்பு அமாவாசை.

**நட்சத்திரம்:** இன்று காலை 09:20 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

**யோகம்:** சித்த.

**சந்திராஷ்டமம்:** திருவாதிரை.

**சூலம்:** கிழக்கு.

**இராகு காலம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

**குளிகை:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

**எமகண்டம்:** 09:00 AM முதல் 10:30 AM வரை.

# 2030 ஆம் ஆண்டில் 36 பில்லியன் டொலர் ஏற்றுமதி இலக்கு



புதிய அரசாங்கத்தின் "வளமான நாடு – அழகான வாழ்வு" கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக 2030 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சர்கள் சபையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் 16.1 பில்லியன் டொலர்களாக காணப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை இந்த ஆண்டு 18.2 பில்லியன் டொலர்களாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கும் அதேநேரம், புதிய திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டில் வருமானத்தை 36 பில்லியன் டொலர்களாக உயர்த்திக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி செய்ய, உள்நாட்டு உற்பத்தியை பலப்படுத்தி ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் அமைவிடம், மனித வளங்கள் மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி நீண்ட கால கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அதன் மூலம் வீழ்ச்சியடைந்த உள்நாட்டு உற்பத்தித் தொழில்துறைகளுக்கு புத்துயிர் அளித்தல், ஏற்றுமதித் தொழில்துறைகளில் போட்டித்தன்மை மிக்கதாக்குதல், சேவை தொழிற்துறையை ஊக்குவித்தல், புதிய கேள்விகள் மூலம் உலகச் சந்தையில் இடம்பிடித்தல், தேசியத் திட்டத்திற்கு அமைவாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை வரவழைத்தல், புதிய முதலீடுகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல், குறைந்த செலவு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்ளீடுகள், விநியோகங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு உள்ளடக்கப்படும் வரியை மீளப் பெற்றுக்கொடுப்பதற்கான (ஏயுவு சுநுகுருனே ளுலுளுவுநுஆ) கட்டமைப்பை விமான நிலையத்தில் அமைக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

ஏற்றுமதிப் பொருட்களைப் பரிசோதிக்கும் போது ஏற்படும் தாமதம் மற்றும் வினைத்திறன் இன்மையைத் தவிர்ப்பதற்காக, ஆயரெயட முறைக்குப் பதிலாக, சர்வதேச தரத்திற்கு அமைவான தானியக்க (ளுஉயniபெ) முறைமையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவ திட்டமிடப்பட்டது. அதற்கான ஒதுக்கீடுகளை தொழிற்துறை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள இணக்கம் எட்டப்பட்டது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் புகையிரத என்ஜின் ஏற்றுமதிக்கு தடையாக காணப்பட்ட" புகையிரத என்ஜின் பரிசோதனையை" இலங்கையில் மேற்கொள்ள அனுமதியளிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

ஏற்றுமதித் தொழில்துறையின் செலவை மட்டுப்படுத்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலாதாரங்களை அறிமுகப்படுத்தவும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செலவீனங்களை பயனுள்ளதாக்கி மின்சாரத்தைச் சேமிக்கும் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

# வேலையற்ற பட்டதாரிகள் குழு கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

**(ஹஸ்பர் ஏ.எச்)**

2024 ஆகஸ்ட் மாதம் மாகாண ஆசிரியர் போட்டி பரீட்சைக்கு தோற்றி நேர்முப்பரீட்சைக்கு தோற்றிய வேலையற்ற பட்டதாரிகள் குழு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகரவுடன் திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நேற்று (27) கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதன் போது பட்டதாரிகள் பல கோரிக்கைகளின் அடிப்படையில் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தனர். மேலும் அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, இந்த பரீட்சை பெறுபேறுகள் எதிர்கால ஆட்சேர்ப்புக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். அத்தகைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நிரந்தர தீர்வை அவர்களால் வழங்க முடியாது என்றும், அவர்களின் கோரிக்கை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார்.

கூட்டத்தில் உரையாற்றியபோது, இந்த நியமனங்களில் பல தரப்பினர் ஆர்வமாக இருப்பதால், அனைவருக்கும் நியாயமான முடிவு எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. மேலும்,நேர்முகத் தேர்வை எதிர்கொண்டவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக மாகாண கல்விச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதால், அவர்களின் பிரச்சினைகளை அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# புல்மோட்டை சந்தை வளாகத்தை உடனடியாக திறக்க ஆளுநர் உத்தரவு

**(எஸ்.கீதபொன்கலன்)**



புல்மோட்டை பொதுத் சந்தை வளாகத்தை உடனடியாக திறக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகர உரிய தரப்பினருக்கு உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிறன்று(26)திருகோணமலை புல்மோட்டை பகுதிக்கு ஆய்வு சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆளுநர் 2015 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டதும்,குச்சவெளி பிரதேச சபைக்குரியதுமான இவ் பொதுச்சந்தை வளாகம் இதுவரை பயன்படுத்தப்படாமலும்,கைவிடப்பட்ட நிலையிலும் உள்ளதை அவதானித்தார். இதனை அடுத்தே பொதுச்சந்தையை திறக்கும் உத்தரவை வழங்கினார்.

# கடலில் காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு

**(மூதூர் நிருபர் எம்.என்.எம்.புஹாரி)**

திருகோணமலை –ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் களப்புக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவரொருவர் காணாமல் போயிருந்த நிலையில் சடலம் நேற்று திங்கட்கிழமை (27) காலை பிரதேச மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌஸான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (26) தோணியொன்றில் மீன்பிடிக்கச் சென்ற இலங்கைத்துறை முகத்துவாரத்தைச் சேர்ந்த வடிவேல் மகேந்திரன் (வயது 53) என்ற மீனவர் கடலில் காணாமல் போயிருந்தார். அவரது சடலம் நேற்று (27) காலை பிரதேச மீனவர்களால் மீட்கப்பட்டிருந்தது. இவர் தோணியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது படகொன்று மோதி படகில் வந்தோர் தப்பித்துச் சென்றிருக்கலாம்.இதனால் தோணி கடலில் புரண்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இந்நிலையில் தோணியில் மோதி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் படகில் மீன்பிடியில் ஈடுபட்ட படகோட்டி மற்றும் உதவியாளர் உட்பட இருவரை ஈச்சிலம்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## நெஞ்சைத் தொட்டு சொல்ல வேண்டும்...!

ஐக்கிய தமிழர் ஒன்றியம் - யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய கூட்டணி இது. பொதுத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்ட 17 குழுக்கள் ஒன்றிணைந்து இந்தக் கூட்டணி உருவாகி இருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார இலக்குகளை மையப் பொருளாக வைத்து முன்னோக்கிப் பயணிக்கப் போவதாக இந்தக் கூட்டணி அறிவித்திருக்கிறது.

“தமிழ் மக்கள் எதிர்பார்த்த இலக்குகளை தமிழ் தேசிய அரசியல்வாதிகள் செய்யவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டு. இதன் காரணமாக சுயேச்சை குழுக்களாக கடந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட தரப்புகளை ஒன்றிணைத்து தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்காலத்தில் சிதறடிக்காமல் மக்கள் பலத்தினை காட்டுவதற்காக ஒன்றிணைந்துள்ளோம்” என இவர்கள் யாழ்ப்பாணத்தில் அறிவித்திருக்கிறார்கள்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல், தமிழ் தேசிய அரசியலுக்கு நல்ல பாடம் புகட்டி இருக்கிறது என்பது யதார்த்தமான உண்மை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதித்துவம் வெகுவாக குறைந்துவிட்டது. தமிழ் தேசியத்தை எண்ணக் கருவாகக் கொண்ட, பிரதிநிதிகளின் எண்ணிக்கை பத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. 20க்கும் மேற்பட்ட எம்பிக்களை கொண்டிருந்த தமிழ் தேசியம், இன்று இந்த நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது.

தமிழ்த் தேசியம் தான் இந்தக் கட்சிகளின் கொள்கை. தமிழர் நலனுக்காகவே தங்களை அர்ப்பணித்து அடையாளப்படுத்தியிருக்கும் பேராளுமைகள் நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டார்கள். ஒன்றுபட்ட செயல்பாடு என்பது பூஜ்ஜியமாகவே இருந்தது. தமிழ் தேசியத்தை அடி நாதமாக கொண்டு காலம் காலமாக செயல்பட்ட இந்த கட்சிகள், அதிகார மமதையை இறுக்கிப்பிடித்ததனால் எதிர்பாராத பெறுபேறுகளை தமிழ் இனம் சந்தித்திருக்கிறது.

மூச்சுக்கு மூச்சு தமிழ் தேசியம் என்று பேசுகின்ற இந்த தமிழ்த் தேசியக் கட்சிகள்,

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத நிலையும், தன்மானச் சிங்கங்களாக தங்களை காட்டிக் கொண்டதும் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு போனதற்கான ஒரு சில காரணங்களில் சிலவாக இருக்கின்றன. பாரம்பரிய கட்சி என்று கூறி, தோழமைக் கட்சிகளையும் ஓரங்கட்டி, ஆளப்பிறந்தவர்களாக போலித்தனம் காட்டியதும் தமிழ்த் தேசிய கட்சிகளின் பின்னடைவுக்கு காரணமாக அமைந்திருக்கின்றன.

தமிழ்த்தேசியம் என்பது தமிழர்களுக்கான இறையாண்மைமிக்க தேசத்தைப் படைப்பது. அதாவது,

தமிழர் பிரதேசத்தை தமிழர்களே ஆள்வது தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமை! (Fundamental Political Rights) கோட்பாடாக இதனை பார்க்க முடியும்.

தமிழர்களின் அரசியல், மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, கல்வி, மருத்துவம், அறிவியல், வாழ்வாதாரம், சமுதாயம், சமூக அமைப்பு, சமூகநீதி, மெய்யியல், தொன்மை.... ஆகியவற்றை பாதுகாக்க ஓர் அரசியல் உண்டென்றால் அது தமிழ்த்தேசிய அரசியல். ஆனால், நடந்திருப்பது என்ன..?

இன விடுதலைக்காக ஒரே கொள்கையின் கீழ் செயல்படுகின்ற இந்தத் தமிழ் தேசிய கட்சிகள், பிளவுபட்டு நின்றதனால், மக்களால் தூக்கி வீசப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் களம் அதனை நிரூபித்து காட்டி இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகளையும் தமிழர் அரசியலையும் பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் தென்பகுதி அரசியல் கட்சிகள் காலங்காலமாக முனைப்போடு செயல்பட்டு வந்தன. முடியாமல் போன நிலையிலிருந்து விடுபட்டு இப்போது வெற்றிகண்டு இருக்கிறார்கள் என்பது நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது.

தமிழ் தேசியத்துக்குள் இறுக்கமாக இருந்த தமிழ் மக்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் - தமிழ் தேசியத்துக்கு எதிரான கட்சிக்கு வாக்குகளை வாரி வழங்கியிருக்கிறார்கள். நடந்து முடிந்த தேர்தலில், இடதுசாரி கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து மூன்று பிரதிநிதிகளை கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய கட்சிகளுக்குள் நடந்த வெட்டுக் குத்துகளும், ஒற்றுமைப்படாத செயல்பாடுகளும் தமிழ் மக்களை, தமிழ் தேசிய கட்சிகளுக்கு எதிராக திசை திருப்பின. தமிழ்த் தேசிய கட்சிகள் இதனை பொறுப்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொறுப்புக் கூறல் பற்றி சர்வதேச ரீதியில் அரசுக்கு பாடம் புகட்டும் தமிழ்த் தேசியக் கட்சிகள், பொறுப்புடன் நடந்து கொண்டதா..? என்பதை நெஞ்சைத் தொட்டுச் சொல்ல வேண்டும். சுயநலத்தோடு செயல்பட்ட இந்த கட்சிகள் எல்லாம், தமிழ்த் தேசியம் பற்றி பேசுவதற்கு அருகதை அற்றவர்கள் என்பதை மக்கள் ஓரளவு தீர்மானித்திருக்கிறார்கள். பிழைப்பு வாதம் பேசுவதை தவிர்த்து, தேசியம் என்ற இலக்கோடு பயணிப்பதற்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது.

இந்த நிலையில் தான், சுயேச்சைகளின் புதிய ஒன்றியம் தலையெடுத்திருக்கிறது. சுயேச்சையாக போட்டியிட்டவர்கள் எல்லாம், தமிழ்த் தேசிய கட்சிகளை உடைத்து பலவீனப்படுத்துவதற்காக பினாமிகளாக களம் இறக்கப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் இருக்கின்றன. யாரோ ஒருவரின் தேவைக்காக, பணம் பெற்று போட்டியில் இறங்கியவர்கள் இவர்கள். தென்பகுதி அரசியல் பிரமுகர்களும் குரோத சிந்தனையோடு இருப்பவர்களும் இதன் பின்னால் இருந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது.

நடந்து முடிந்த தேர்தலிலே ஆயிரக்கணக்கான சுயேச்சைகள் நிறுத்தப்பட்டார்கள். வேட்பாளர்களை பலவீனப்படுத்தும் துரும்புச் சீட்டுகளே இவர்கள் என்றும் சொல்லலாம். வடக்கில் தமிழ் தேசிய கட்சிகளின் வாக்குகள் சிதைவடைந்ததற்கு சுயேச்சைகளும் காரணம்.

இந்த நிலையில்,தமிழ் மக்களுக்காக புதிய கூட்டணி உருவாக்குவதாக சுயேச்சைக் குழுக்கள் ஒன்றியம் அறிவித்திருப்பது வேடிக்கையானது. பிரிந்து பிரிந்து செயல்படுவதில் அர்த்தம் இல்லை. முடிந்தால் எல்லோரும் ஒன்றுபடுங்கள். இல்லையேல் தமிழ்மக்களை நிம்மதியாக இருக்க விடுங்கள்.



# RE-CALLING SYSTEM

# அரசியல் அமைப்புக்கு சஜித் பிரேமதாசவின் புதிய யோசனை

## புதிய உபாயங்களோடு புதிதாக பயணிப்போம்

மாற்றத்தை உருவாக்குபவர்களாக, ஒளிமயமான நாளை வடிவமைக்கும் பொறுப்பும் வாய்ப்பும் நமக்கு காணப்படுகின்றது. கட்சி குறித்த எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பாக நாம் மீள சிந்திக்க வேண்டும். உலகம் முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில், எமது நாட்டு மக்கள் சவால்களையும் வாய்ப்புகளையும் எதிர்கொண்டுள்ளனர். மக்கள் துணிச்சலான நடவடிக்கைகளைக் கோரி, நாட்டைப் பலப்படுத்தும் பயணத்தில் பெரும் நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். இந்த தருணத்தில் பழைய கோட்பாடுகளை நம்பி இருக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பழைய கருத்துக்களில் சில முக்கியமான நேர்மறையான அம்சங்கள் இருந்தாலும், எல்லாமே நொடிக்கு நொடி மாறி வருகின்றன. அறிவும் மூலோபாயங்களும்

> ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்காக கொழும்பில் நடந்த செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மாறி வருகின்றன. அரசியல் நிபுணர்கள் மற்றும் அரசியல்வாதிகளை விட குடிமக்கள் வித்தியாசமாக முடிவுகளை எடுக்கின்றனர். குடிமக்கள் எல்லாவற்றிலும் பங்கேற்று செயலிலும் முடிவெடுப்பதிலும் நேரடியாக பங்களிக்கிறார்கள். கடந்த ஆண்டு நடந்த தவறில் பெரிய இடைவெளியொன்று உருவாகியுள்ளது. அந்த இடைவெளியை நிரப்ப வேண்டுமானால் அதிகாரத்தில் இருப்பவர்களை விட நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். இது பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாக அமைந்து காணப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்காக கொழும்பில் நடந்த செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்சியில் இருப்பவர்களால் சிந்திக்க முடியாததை, செய்ய முடியாததை பொதுமக்கள் மத்தியில் நாம் முன் வைக்கும்போது அது மக்கள் கருத்தாக அமையும் விதமாக வழிவகை செய்ய வேண்டும். புதிய உபாயங்களை வகுத்து செயற்படுவது மிகவும் அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

போட்டிகளுக்கு அப்பால் சென்று மக்களுடன் சுமூகமான உறவைப் பேண நாம் வித்தியாசமாக சிந்திக்க வேண்டும். குடிமக்கள் முடிவெடுப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்க, இரண்டாவது பொது மன்றம் குறித்து உலகமே பேசி வருகிறது. சில நாடுகளில் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சமூகத்தில் இது குறித்து பேச்சு நடந்து வருகிறது. பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த பின்னர் அவற்றை நிறைவேற்றாத திறமையற்ற மக்கள் பிரதிநிதிகளை மீள அழைக்கும் (Re-Calling System) அரசியலமைப்பு குறித்து சிந்திக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.





மக்களோடு தொடர்புகளை ஏற்படுத்த, வாக்காளர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். பீனிக்ஸ் பறவை போல் சாம்பலில் இருந்து மீண்டெழ வேண்டும். மறுபரிசீலனை செய்வது, புதிதாக சிந்திப்பது, ஆக்கப்பூர்வமான யோசனைகள் மூலம் முன்னோக்கி பயணிக்க வேண்டும். நாம் ஒரு திருப்புமுனையை சந்திக்க வேண்டும். கட்சியின் எதிர்காலம் மற்றும் புதிய மூலோபாயம் குறித்தும் நாட்டின் எதிர்கால அபிவிருத்தி குறித்தும் நாம் புதிதாய் சிந்தித்து பணியாற்ற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# இந்தியா என்கின்ற சகோதரனின் கதவை எந்நேரமும் தமிழ் மக்கள் தட்டலாம்

## இந்திய துணைத் தூதர் சாய் முரளி தெரிவிப்பு!

(பு.கஜிந்தன்)

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தேவைகளை அறிந்து செயற்படும் இந்தியா என்கின்ற சகோதரனின் கதவை எந்நேரமும் தமிழ் மக்கள் தட்டலாம் என யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதர் சாய் முரளி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை (26) யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம் பெற்ற இந்தியாவின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா இராஜதந்திர உறவைத் தாண்டி வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் பயணித்து வரும் சகோதரனாக மக்களின் தேவைகளை அறிந்து உதவிகளை மேற்கொண்டு வருகிறது.




யாழ். துணைத்தூதரகம் வடக்கு மக்களின் நல்ல நண்பனாகவும் சகோதரனாக செயற்பட்டுவரும் நிலையில் யார் நண்பன் யார் பகைவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் உங்களுடன் சேர்ந்து எடுத்த தீர்மானங்கள் சில வேளைகளில் மாறுபாடுகளை ஏற்படுத்தினாலும் தமிழ் மக்களின் உரிமை மற்றும் நலன்களில் என்றும் ஆதரவாளனாக யாழ்ப் பாணம் தூதரகம் சொயற்படும்.

இந்தியா மக்கள் யாழ்ப்பாண மக்களின் அறிவாற்றலை அன்றும் இன்றும் பொருமை கொள்பவர்கள் என்பதை கூறிக் கொள்வதில் பொருமையடைவதோடு இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நன்கு உணரும்.

ஆகவே வடக்கு மக்களின் பாதுகாவலனாகவும் சிறந்த நண்பனாகவும் யாழ் இந்தியத் துணைத் தூதரகம் என்றும் செயற்படும் எனக் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான றஜீவன், பவானந்தராஜா உட்பட அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணி விபரங்களை வழங்குங்கள்




(கி.வசந்தன்)

இராணுவம் மற்றும் கடற்படையின் ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் காணி விபரங்களை எம்மிடம் ஒப்படைத்தால் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் நேற்று (27) திங்கட்கிழமை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் இராணுவத்தினர் தமது தேவைக்காக வன்னிப் பிரதேசத்தில் கையகப்படுத்திய பிரதேசங்களை படிப்படியாக எமது அரசாங்கம் விடுவித்து வருகின்றது. கடந்த காலங்களிலும் இவ்வாறான காணிகளை எமது அரசாங்கம் விடுவித்து இருந்தது.

கடந்த வாரமும் இராணுவம் மற்றும் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து இருந்தது. எனவே அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட இடங்கள் இருக்குமாக இருந்தால் அது தொடர்பான விபரங்களை எமக்கு தந்து உதவுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம்.

அவ்வாறான இடங்களை மிக விரைவில் விடுவித்து மக்களுடைய பாவனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க உள்ளோம் எனத் தெரிவித்தார்.

# இலங்கை தேசிய கல்வி நிறுவன சபைக்கு யாழில் இருந்து இருவர் நியமனம்!





(பு.கஜிந்தன்)

இலங்கையின் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய அவர்கள் , இலங்கையின் தேசிய கல்வி நிறுவன சபைக்கு யாழ்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும் – யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி. மகேந்திரன் திருவரங்கன் மற்றும் உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் அவர்களையும் நியமித்துள்ளார்.

இவர்கள் இருவரும் எதிர்வரும் 30ஆம் திகதி பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் அவர்களை சந்திக்கவுள்ளனர். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட இருவருக்கும் பல்வேறு தரப்பினரும் பாராட்டுக் களை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் பிரதி அமைச்சரால் திறந்து வைப்பு

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் நேற்று திங்கட்கிழமை (27) பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார் வீதியில் வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலேயே குறித்த ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதோடு, பாராளுமன்ற நாட்கள் தவிர்ந்த தினங்களில் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இவ் அலுவலகத்தில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் உளுந்து செய்கை முற்றாக அழிவு: விவசாயிகள் கவலை



(கி.வசந்தன்)

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக உளுந்துச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தெற்கு ஆசியாவை பூர்வீகமாக கொண்டது உளுந்து செய்கை. இலங்கையில் விளைவிக்கப்படும் தானியங்களில் உளுந்தும் முக்கியமானது. உளுந்து செய்கையானது வடக்கில் வவுனியாவில் அதிகமாக செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. உளுந்துக்கான கேள்வியானது அதிகமாக இருக்கின்றது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன்பட்டும், நகைகளை அடைவு வைத்தும் செட்டிகுளம், ஓமந்தை, பாவற்குளம், சூடுவெந்தபுலவு, நெடுங்கேணி, சிப்பிக்குளம், பறநாட்டாங்கல் என பல பகுதிகளிலும் உளுந்து செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

2024- 2025ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெரும் போகத்தில் 5650 ஹெக்டேயர் அளவில் வவுனியாவில் உளுந்து செய்கை பண்ணப்பட்டது. இருப்பினும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், நோய் தாக்கத்தினாலும் இம்முறை உளுந்து செய்கையாளர்கள் பலர் பாதிப்படைந்துள்ளதுடன் பயிற் செய்கைக்கு செலவு செய்த பணத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உளுந்து அறுவடைக்கு தயாராக இருந்த வேளை வவுனியாவில் தொடர்ச்சியாக கனமழை பெய்தமையால் உளுந்து செடிகளிலேயே முளைத்து விட்டது. இதனால் அதனை அறுவடை செய்ய முடியாத நிலையில் தமது செலவீனத்தைக் கூட மீளப் பெற முடியாதவாறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உளுந்து 100 வீதம் அழிவடைந்துள்ள நிலையில் தமக்கான நஸ்டஈட்டை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தூக்கிலிட்டு கொல்லப்பட்ட நாய் சந்தேகநபரான பெண் கைது



நாய் ஒன்றை தூக்கிலிட்டு கொலை செய்த சம்பவம் தொடர்பில் மாங்குளத்தை சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில், "ஒட்டுசுட்டானில் உள்ள இணக்கச்சபை ஒன்றில் விசித்திரமான தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் அதில் நாய் ஒன்று தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவும்" சமூக ஊடகங்களில் பதிவு ஒன்று அதிகம் பகிரப்பட்டு வந்தது.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மாங்குளத்தை சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் மத்தியஸ்த சபையில், பெண் ஒருவர் தனது ஆட்டினை நாய் ஒன்று கடித்து விட்டதாக கூறி, முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது, இணக்கசபையில் இருந்த மூன்று நீதவான்கள், குறித்த நாயை தூக்கிலிட்டு கொலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

அத்துடன், நாயை தூக்கிலிட்டு கொலை செய்த பின்னர் அதனை புகைப்படம் எடுத்தும் தமக்கு அனுப்பி வைக்குமாறு குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், அந்த பெண் அந்நாயின் கழுத்தை மரமொன்றில், கயிற்றினால் கட்டி, கொலை செய்துள்ளதுடன் அதனை புகைப்படம் எடுத்துள்ளார்.

இதனை தொடர்ந்து, இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளனர்.

மனிதாபிமானமற்ற வகையில், ஐந்தறிவுடைய உயிரினம் ஒன்றுக்கு இவ்வாறான ஒரு தண்டனை வழங்கப்பட்டுள்ளமை கண்டிக்கப்பட வேண்டிய விடயம் எனவும் மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

அதேவேளை, இந்த சம்பவத்தில் தொடர்பானவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்குமாறும் பொதுமக்கள் கோரி வந்தனர்.

இதனை தொடர்ந்து, மாங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 48 வயதுடைய பெண் ஒருவர் நேற்று திங்கட்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் 1907ஆம் ஆண்டு 13ஆம் இலக்க விலங்குகளுக்கு வன்கொடுமை செய்வதைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்படுவார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

# மன்னார் சாந்திபுரத்தில் தீ விபத்து





(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் சாந்திபுரம் பகுதியில் நேற்று (27) திங்கட்கிழமை குடிசை வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக வீடு முற்றாக எரிந்து தீக்கிரையாகிய நிலையில் மக்களின் உதவியால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மன்னார் சாந்திபுரம் சிறுவர் பூங்காவிற்கு பின் பகுதியில் திடீரென தீ பரவல் ஏற்பட்ட நிலையில் இதனை அவதானித்த மக்கள் விரைவாக செய்யப்பட்டதன் அடிப்படையில் தீப்பரவல் அருகில் உள்ள வீடுகளுக்கு பரவ முன்னதாக அணைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் மன்னார் மின்சார சபை, மன்னார் நகர சபையின் தீயணைப்பு வாகனம் உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்ததுடன் முழுமையாக தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குறித்த தீ பரவல் காரணமாக எந்த ஒரு உயிர் சேதமும் ஏற்படவில்லை.எனினும் வீட்டில் காணப்பட்ட உடமைகள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியது. என்பதுடன் மக்கள் ஒண்றினைத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் பெரும் தீ விபத்தானது தவிர்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஆய்வகத்திலிருந்தே கொரோனா பரவியது - அமெரிக்கா

அமெரிக்காவின் உளவு முகவரகமான சிஐஏ (The Central Intelligence Agency) சனிக்கிழமை வெளியிட்ட பகுப்பாய்வு முடிவின்படி, கொரோனா பெருந்தொற்று விலங்குகளிலிருந்து அல்லாமல் சீன ஆய்வகத்திலிருந்து ஏற்பட்டிருக்கதான் “வாய்ப்புகள் அதிகம்” என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதன் முடிவுகள் குறித்து தங்களுக்கு “அதிக நம்பிக்கை” இல்லை என உளவு முகமை தெரிவித்துள்ளது. ஏற்கனவே உள்ள தரவுகளின்படி, கொரோனா பெருந்தொற்றுக்கு இயற்கையான காரணத்தைவிட “ஆய்வு ரீதியாக உருவாகியிருப்பதற்கான” சாத்தியக்கூறுகள்தான் அதிகம் என, சிஐஏ செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்பால் நியமிக்கப்பட்டு, கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்ட சிஐஏவின் புதிய இயக்குநர் ஜான் ரட்கிளிஃப் எடுத்த முதல் முடிவு, இந்த மதிப்பாய்வை வெளியிடுவதுதான். இவர், முந்தைய ட்ரம்ப் ஆட்சியில் தேசிய உளவு முகமையின் இயக்குநராக பணியாற்றினார். அப்போது, சீனாவின் வூஹான் வைராலஜி ஆய்வகத்திலிருந்துதான் கொரோனா பரவியது எனும் வாதத்தை அவர் ஆதரித்து வந்தார். இந்த ஆய்வகத்திலிருந்து 40 நிமிடத்தில் செல்லக்கூடிய தூரத்தில்தான் ஹுனான் இறைச்சி சந்தை உள்ளது. இந்த சந்தையிலிருந்துதான் கொரோனா பெருந்தொற்று அதிகளவில் பரவ ஆரம்பித்தது.

பிரெயிட்பார்ட் நியூஸ் ஊடகத்துக்கு ஜான் ரட்கிளிஃப் வெள்ளிக்கிழமை அளித்திருந்த பேட்டியில், கொரோனா வைரஸ் பெருந்தொற்று எங்கிருந்து ஆரம்பித்தது எனும் விவகாரத்தில் சார்பற்ற நிலைப்பாட்டை சிஐஏ கைவிட்டு, “நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தெரிவித்தார். பல வழிகளில் சீனாவிலிருந்து வரும் தாக்குதல்கள் குறித்து நான் அதிகம் பேசிவருகிறேன், இது, பல இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் ஏன் தங்கள் உயிரை இழந்தனர் என்பதுடன் தொடர்புடையது. கொவிட் எங்கிருந்து ஆரம்பித்தது எனும் மதிப்பாய்வை கடந்த ஐந்து ஆண்டுகளாக மேற்கொள்ளாமல் சிஐஏ வெறுமனே அமர்ந்து வேடிக்கை பார்த்தது ஏன்?” என அவர் தெரிவித்தார். “இதுதான் என்னுடைய முதல் நாள் வேலை.” ஆனால், இந்த மதிப்பாய்வு ட்ரம்ப் ஆட்சியின் புதிய உளவு முகமையால் மேற்கொள்ளப்பட்டது அல்ல என்றும், அதற்கு முந்தையை ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டது என்றும் அதிகாரிகள் அமெரிக்க ஊடகங்களில் தெரிவித்துள்ளனர். இந்த மதிப்பாய்வு, முந்தைய பைடன் நிர்வாகத்தின் கடைசி வாரங்களில் உத்தரவிடப்பட்டு, திங்கட்கிழமை ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்பாக






முடிக்கப்பட்டிருக்கும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த முடிவுகள் மீது “அதிக நம்பிக்கை இல்லை” என சிஐஏ தெரிவித்துள்ளது, அதாவது இது முடிவுறாமலும், முரணாகவும், குறைபாடுகளுடனும் உள்ளதாக தெரிவித்துள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்கான காரணம் என்ன என்பதில் ஒருமித்த கருத்து இல்லை. இந்த வைரஸ், விலங்கிலிருந்து “இயற்கையாகவே பரவியிருக்கலாம்” என்றும், விஞ்ஞானிகள் அல்லது ஆய்வகங்களுக்கு இதில் பங்கு இல்லை என்ற கருத்தை சிலர் ஆதரிக்கின்றனர். ஆய்வகத்திலிருந்து இது பரவியிருக்கலாம் எனும் அனுமானம் குறித்து பல விஞ்ஞானிகள் தீவிரமாக விவாதித்து வருகின்றனர், அவர்களுள் பலரும் இதற்கு வலுவான ஆதாரம் இல்லை என கூறிவருகின்றனர். இது அமெரிக்காவின் ”அரசியல் சூழ்ச்சி” என சீனா கடந்த காலத்தில் இந்த கூற்றை நிராகரித்துள்ளது. இந்த அனுமானம், சில உளவு அமைப்புகளால் மீண்டும் கவனம் பெற்று வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டில், அமெரிக்காவின் புலன் விசாரணை அமைப்பான எஃப்.பி.ஐ-யின் இயக்குநர் கிறிஸ்டோஃபர் வ்ரே, தங்களின் அமைப்பு மேற்கொண்ட மதிப்பாய்வில்தான் “கொரோனா பெருந்தொற்று ஆய்வகத்திலிருந்து பரவியதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பது” தெரியவந்ததாக ஃபொக்ஸ் நியூஸிடம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

- நன்றி பிபிசி







**சிறுவர் துஷ்பிரயோகம் எனபது உடல், உளவியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு வடிவங்களில் நிகழ்வதால் இது சிறுவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பெரிதும் பாதித்து, அவர்களின் எதிர்காலத்தை சூனியமாக்கின்றது..!**

# சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு சமூகப் பிரச்சினை

**சிறுவர்களுக்கான மனநல ஆலோசனைகள் மற்றும் ஆதரவான நிகழ்ச்சிகள் மூலம், அவர்களின் மன அழுத்தங்களைக் கையாள முடியும்.**

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களின் மனநிலையில் ஏற்படும் வஞ்சகமான, ஆபத்தான அல்லது தவறான நடத்தை, பெரும்பாலும் பராமரிப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடையது. இது பொதுவாக, ஊட்டச்சத்து பற்றாக்குறை, குடும்பத்தில் அல்லது பாடசாலையில் பெற்றோர் அல்லது ஆசிரியர்களிடமிருந்து தேவையான கவனம் மற்றும் வழிகாட்டி குறைபாடு, அல்லது தற்காலிக மனக்கவலைகள் போன்ற காரணங்களால் ஏற்படும்.

இன்றைய உலகில், சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு பெரும் சமூக பிரச்சனையாகும். உடல், உளவியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு வடிவங்களில் இது நிகழ்கிறது. இது சிறுவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பெரிதும்







பாதித்து, அவர்களின் எதிர்காலத்தை கெடுக்கும். இந்த பிரச்சினையை தீர்க்க, சமூகப்பணியாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

முதலில் சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகளை பின்வருமாறு நோக்கலாம்.

அடித்தல், உதைத்தல், எரித்தல் போன்ற உடல் ரீதியான காயங்களை ஏற்படுத்துதல் சிறுவர்களை அவமதித்தல், பயமுறுத்துதல், புறக்கணித்தல் போன்ற செயல்கள் சிறுவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துதல் அல்லது சுரண்டுதல். சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாது இருத்தல்.

போன்ற முறைகளில் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றன. அவையாவன,

குடும்பத்தில் ஏற்படும் வன்முறை, குழந்தைகளையும் பாதிக்கிறது. வறுமை, வேலையின்மை போன்ற சமூக பொருளாதார பிரச்சினைகள் வன்முறையை அதிகரிக்கச் செய்யலாம். பெற்றோரின் மனநல பிரச்சினைகள், குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கலாம். மது மற்றும் போதைப்பொருள் உபயோகம், தீர்மானங்களை எடுக்கும் திறனை பாதித்து, வன்முறையை ஏற்படுத்தலாம்.

சமூகத்தில் நிலவும் அலட்சியம், சிறுவர் துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கலாம்.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் விளைவுகள் பற்றி அவதானிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த பல்வேறு காரணங்கள் உள்ளன. இது பெரும்பாலும் தனிமை, மன அழுத்தம், குடும்பத்தில் தொடர் வன்முறை, உடல் அல்லது மன உளைச்சல் போன்ற காரணங்களால் உருவாகிறது. இவ்வாறு கையாளப்படாத சிறுவர் துஷ்பிரயோகம் எதிர்காலத்தில் பல்வேறு சமுதாய பிரச்சினைகள், குற்றங்கள், மனநிலைச் சிக்கல்களை உருவாக்குகிறது.

சிறுவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கான முறைகளை அறிவதோ, நல்வழிமுறைகளை கற்றுக்கொள்வதோ, உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்வதோ இல்லாதபோது, அவர்கள் அதிக அசாதாரணமான, வன்முறை அல்லது அபாயகரமான செயல்களை புரிந்துகொள்வது சாதாரணமாக இருக்கலாம். இதில் காணப்படும் சமூகப்பணியாளர்களின் பங்குகள் பின்வருமாறு,

**1. பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவு:**

பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உளவியல் ஆலோசனை, சிகிச்சை மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தி தருதல். சிறுவர்கள் தனக்கென இருக்கும் ஆதரவினை உணர்ந்தால், அவர்களுக்குள் அதிக மனச்சோர்வு அல்லது உளவியல் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

**2. சிறந்த வழிகாட்டல்:**

சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் சரியான நடைமுறைகளுக்கு வழிகாட்டுதல் வேண்டும். உதாரணமாக, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் அவர்களுக்கு அமைதி மற்றும் உள்ளுணர்வு வழங்க வேண்டும்.

**3. மனநல ஆலோசனை:**

சிறுவர்களுக்கு மனநல ஆலோசனைகள் மற்றும் ஆதரவான நிகழ்ச்சிகள் மூலம், அவர்கள் தமக்குள் உள்ள மன அழுத்தங்களைக் கையாள முடியும். இது துஷ்பிரயோகம் மற்றும் அதனால் ஏற்படும் பல பிரச்சினைகளிலிருந்து சிறுவர்களை விலக்கி விடும்.

**4. குடும்பங்களுக்கான ஆலோசனை:**

குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கி, வன்முறையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுதல்.

**5.விழிப்புணர்வு ஏற்படுத்துதல்:**

சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவித்தல்.

**6.சட்டப்பூர்வ நடவடிக்கைகள்:**

தேவைப்படும் சூழ்நிலைகளில், சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.

**7.சமூக மாற்றம்:**

சமூகத்தில் நிலவும் கண்ணோட்டங்களை மாற்றி, குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.

இதற்கான கட்டுப்பாடுகளும் எதிர்கால நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். அவையாவன,

சிறுவர் துஷ்பிரயோகத்தை முற்றிலும் தடுக்க முடியாத போதும், அதனை சரிசெய்யும் பணிகளில் சமுதாயத்திலுள்ள அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் (பெற்றோர், ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள்) சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் வளரும் வாழ்க்கையை முக்கியமாகக் கையாள வேண்டும். இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள்:

- 1939ஆம் ஆண்டின் சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்
- 1950ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்களையும், பிள்ளைகளையும், இளம் ஆட்களையும் தொழிலுக்கு அமர்த்தல் சட்டம். மேற்குறிப்பிட்ட சட்டங்களின்படி 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே,

சமூகப்பணியாளர்கள், இந்த பிரச்சினையை தீர்க்க முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவாக இருப்பதுடன், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, நீண்டகால தீர்வுகளைக் கண்டறிய உதவுகிறார்கள்.

**எச்.எப்.அப்ரா**
**முதலாம் வருட மாணவி,**
**கலாவெவ, சமூகப்பணி**
**தேசிய சமூக அபி. நிறுவனம்**

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு

# அரச இல்லங்களிலிருந்து வெளியேறுவதில் ஏன் சிரமம்

### ஜனாதிபதி அநுர கேள்வி



தானும் தனது அமைச்சர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு இதுவரை செல்லவில்லை.ஆனால், முன்னாள் ஜனாதிபதிகள் அரச இல்லங்களிலிருந்து வெளியேற ஏன் சிரமப்படுகின்றார்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு குடியிருக்க வீடு இல்லையென்றால் அரசாங்கம் அதற்குப் பொருத்தமான வீட்டை வழங்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றினார்.

ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்

“வரி செலுத்துவோரின் பணத்தை செலவழித்து ஒரு மாளிகையில் வாழ்வது நியாயமற்றது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் மாறும் பட்சத்தில் அவர்களால் ஏன் மாற முடியாது? அவர்களுக்கு போக வேறு வசிப்பிடம் இல்லை என்றால், அவர்களுக்கு வாழ பொருத்தமான வீட்டை நாங்கள் வழங்குவோம், அவர்கள் வசிக்கும் மாளிகை மிகப் பெரியது, ”என்று ஜனாதிபதி கூறினார்.

”நாங்கள் அவர்களை வெளியேறச் சொன்னால், அவர்கள் அதை அரசியல் துன்புறுத்தல் என்று சொல்கிறார்கள். நாங்கள் யாரையும் துன்புறுத்த வில்லை. நாட்டை புதிய திசையில் கொண்டு செல்கிறோம். அவர்களை வெளியேறச் சொல்வதற்கு முன், அவர்கள் வெளியேற வேண்டும். அவர்களிடம் நாம் கேட்பது மாற்றத்தை தான். வரி செலுத்துவோரின் பணத்தை செலவழிப்பதற்கு முன், நாம் இரண்டு முறை யோசிக்க வேண்டும், ”என்று அவர் மேலும் கூறினார்.

## ‘புத்தளத்தில் கைவண்ணம்’

# பெண்களின் உற்பத்தி பொருட்கள் விற்பனை



(எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் ஏற்பாட்டில் ”கைவண்ணம்” என்ற பெயரில் புத்தளத்தில் பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய உணவுகள் மற்றும் கைவினைப் பொருட்களின் விற்பனை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் (MWDT) நிறைவேற்று பணிப்பாளர் ஜுவைரியா முஹைதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக முதலீட்டு அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் மதூரி ஏக்கநாயக்க கலந்து கொண்டு விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

புத்தளம் உதவி பிரதேச செயலாளர், கற்பிட்டி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி அதிகாரி, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மகளிர் சங்கத்தின் தலைவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி (Australian Aid) உதவியுடன் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் (MWDT) ஊடாக முன்னெடுக்கப்படும் டெப் ( DAP) வேலைத் திட்டத்தின் வாயிலாக பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட சுயதொழில் பயிற்சியின் மூலம் பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சிறந்ததொரு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த விற்பனை நிலையம் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறுகள்



(எம் எச் எம் சியாஜ்)

தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புத்தளம் – தெற்கு கோட்டத்திற்கு உட்பட்ட புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவர்களான மொஹமட் சிபான் அன்சிப் அஹமட் 147 புள்ளிகள், றபியுதீன் மொஹமட் றிபாஹ் 144 புள்ளிகள் , மொஹமட் முபீன் சபியா 143 புள்ளிகள் என மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் பீ. எம் முஸ்னி தெரிவித்தார். மேலும் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70 புள்ளிகளுக்கு மேல் 69 சதவீத சித்திகளை பெற்றுள்ளனர். இம் மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு அச்சாணியாக திகழ்ந்த ஆசிரியர்களையும் அதிபர் பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# ஜனாஸா நலன்புரி அமைப்பின் முதலாவது இரத்ததான முகாம்



(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் முதலாவது இரத்ததான முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை (26) காலை 08 மணி தொடக்கம் மாலை 04 மணி வரை காத்தான்குடி 01 பதுரிய்யா ஜும்மா பள்ளிவாயலில் நடைபெற்றது .

காத்தான்குடி தள வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் அலிமா ரஹ்மான் மேற்பார்வையில் இடம் பெற்ற இவ் இரத்ததான முகாமில் பெருந்திரலான மக்கள் கலந்து கொண்டு இம் மனிதம் காக்கும் மனிதநேய பணியில் இணைந்து இரத்தத்தை தானம் செய்தனர்.

காத்தான்குடி தள வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் நாளுக்கு நாள் இரத்த தேவைகள் ஏற்படுவதால் அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க து.இரத்ததான முகாமில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட இரத்த கொடையாளர் இரத்த தானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கச்சான் செய்கையாளர்களுக்கு குரங்கினால் ஆபத்து





(ஆரையம்பதி நிருபர்)

அண்மை நாட்களாக வவுனதீவு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட எட்டாம் கட்டைப் பகுதியில் குரங்கின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

ஆதித்தியமலை தெற்கு பிரதேசத்தில் கச்சான் விளை நிலங்களை நாசம் செய்துள்ளது. இதனால் தங்களது ஜீவனோபாயமாக இருக்கும் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட பயன் தரும் கச்சான் விளைச்சல் நிலங்களை முற்றாக அழித்து சேதப்படுத்தியுள்ளது.

இதனால் தங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதனால் இந்த குரங்கின் தாக்கத்திலிருந்து விடுபட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதிப்படைந்த பகுதிக்கு விஜயத்தினை மேற்கொண்டு இதற்கான சரியான தீர்வை பெற்றுத் தர வேண்டும் எனவும் எட்டாம் கட்டை பிரதேச கிராமத்தில் வசித்து வரும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

# காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(எஸ்.எம்.அறூஸ்)

காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று 27ம் திகதி திங்கட்கிழமை காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஏ.ஆதம்பாவா தலைமையிலும், பிரதேச செயலாளர் ஜீ.அருணன் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கோடீஸ்வரன் எம்.எஸ்.உதுமாலெப்பை, அஸ்ரப் தாஹிர், உள்ளிட்டதிணைக்களங்களின் தலைவர்கள், பொறுப்பாளர்கள், அதிகாரிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

காரைதீவு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், திட்ட முன்னொழிவுகள் மற்றும் கடந்த கால வேலைத்திட்டங்களின் மதீப்பிடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் அதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

# உயிரைப்பணயம் வைக்கும் பயணம்











(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் பிரதேச செயலகப் பிரிவில் அடைமழை மற்றும் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக அப்பகுதி மக்கள் இரண்டு வாரங்களாக அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவசர தேவைகளுக்காக உயிரை பணயம் வைத்து நகருக்கு வரவேண்டியுள்ளதாகவும் அங்கலாய்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த சில நாட்களாக அடைமழை பெய்து வந்தது. இதனால் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை இரண்டு வாரங்களாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் அசர தேவைகளுக்காக உயிரை பணயம் வைத்தே திங்கட்கிழமை(27) வரைக்கும் கிரான் நகருக்கு வந்து செல்கின்றனர். கடந்த இரண்டு நாட்களுக்குமுன் இரண்டு விவசாயிகள் நகர்புறத்திற்கு வந்து பொருட்களைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பும் போது காட்டு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர். இருப்பினும் அரசாங்கத்தினால் படகுபாதை சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் ஆபத்தான வீதிகளில் பயணம் செய்து மிகவும் சிரமப்படுவதை தற்போதும் காணக் கூடியதாக உள்ளது.

அப்பகுதியில் இராணுவத்தினர் மனிதாபிமான உதவிகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் மிகவும் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது. இரவு வேலைகளில் தங்களுக்கு மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்த எந்தவித போக்குவரத்துகளும் இன்றி தாம் கஷ்டப்படுவதாகவும் காட்டு யானை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மிகவும் ஆபத்தான வாழ்க்கையை அவர்கள் தற்போதும் வாழ்ந்து வருவதாகவும் அப்பகுதிம்ககள் அங்கலாய்க்கின்றனர்.

## சரக்கு ரயில் தடம் புரண்டது

# புத்தளம் - குருநாகல் வீதியில் போக்குவரத்து ஸ்தம்பிதம்



புத்தளம் – பாலாவி பகுதியில் இருந்து அருவக்காலு பகுதிக்கு சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் புத்தளம் நகருக்கு அருகில் ரயில் பாதையில் இருந்து நேற்று முன்தினம் மாலை (26) தடம் புரண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் – பாலாவியில் சீமெந்து தொழிற்சாலையில் சீமெந்து உற்பத்திக்காக சுண்ணாம்புக் கற்களை ஏற்றிச் செல்வதற்காக அருவக்காலு பகுதிக்கு சென்று கொண்டிருந்த புகையிரதமே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

குறித்த ரயில் பாதையை விட்டு தடம் புரண்டதால், புத்தளம் – குருநாகல் வீதியின் போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரம் ஸ்தம்பித்தது.

இதனையடுத்து, பிரதான வீதியை மறைத்து போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட ரயில் பெட்டிகளை புகையிரத பராமரிப்பு ஊழியர்கள் அகற்றி வாகன போக்குவரத்துகளுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

மேலும், பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ரயில்வே பராமரிப்பு பணியாளர்கள் ரயில் தண்டவாளத்தை தயார் செய்து, வீதியை இயல்பு நிலைக்கு கொண்டு வந்தனர்.

# வாழைச்சேனையில் திருடப்பட்டது அம்பாறையில் மீட்பு; இருவர் கைது!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைறாத் வீதியில் சனிக்கிழமை 25ஆம் திகதி திருடப் பட்ட பல்சர் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நேற்று (27) அம்பாறை பகுதியில் வைத்து மீட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளை பட்டப் பகலில் இருவர் திருடிச் செல்லும் காட்சி சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியிருந்தது.

இந்நிலையில், வாழைச்சேனை பொலிஸாருக்கு வழங்கிய தவகலுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக மோட்டார் சைக்கிளை பொலிஸார் அம்பாறை பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் வைத்து மீட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளை திருடிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இரு சடலங்கள் மீட்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான் புலிபாய்ந்த கல் பாதையை குறுக்கறுத்துச் சென்ற இருவர் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை (25) மாலை வேளையில் இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், சந்திவெளி பகுதியைச் சேர்ந்த 71 மற்றும் 52 வயதுகளுடைய இருவரே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

## மாதச் சம்பளம் இரு வாரத்துக்குக் கூட போதாது

# 20 ஆயிரம் ரூபாவினால் சம்பளத்தை அதிகரிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

(திகாமடுல்ல நிருபர்)

அரசாங்கத்தின் மாதாந்த சம்பளம் இரண்டு வார கால வாழ்வாதாரத்துக்குக் கூட போதுமானதாக இல்லை. எனவே, அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவினால் அதிகரித்து வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் யு.எல். எம். பைஸரினால் ஒப்பமிடப்பட்டு ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தற்பொழுது அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த சம்பளம் இரண்டு வார கால வாழ் வாதாரத்துக்குக்கூட போதுமானதாக இல்லை. அதிகரித்துள்ள பொருட்களின் விலையேற்றம் காரணமாக குறைந்த மாதாந்த சம்பளத்திற்குள் தங்களது குடும்ப சுமையை நிவர்த்தி செய்ய முடியாத நிலைக்கு அரசாங்க ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அன்றாட வாழ்க்கைச் செலவு, கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய செலவுகளுடன் இதர செலவுகளுக்காக தாங்கள் பெறுகின்ற மாதாந்த வேதனம் போதுமானதாக இல்லாத காரணத்தினால், அரசாங்க ஊழியர்கள் பெரும் கடன் சுமைக்கு ஆளாகி வருகின்றனர். இதனால் அதிகமான அரசாங்க ஊழியர்கள் மன உளைச்சலுக்குள்ளாகி வருவதுடன், திருப்திகரமான சேவையை வழங்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

ஆகவே தற்போதைய அரசாங்கம் என்ற வகையில், மக்களின் வாழ்வாதார மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்தி வருகின்ற ஜனாதிபதி என்ற வகையில் அரசாங்க ஊழியர்களின் நிலைமைகளை கருத்தில் கொண்டு, அவர்களின் மாதாந்த வேதனத்தை குறைந்தது 20 ஆயிரம் ரூபாவினால் உடனடியாக அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அக்கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களில் நிரந்தரமாக்கலில் பாரபட்சம்

(முகம்மட் முக்தார்)

உள்ளூராட்சி மன்றங்களில் அமைய, பதிலீட்டு, நிரந்தர, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய பலர் நேர்முக பரீட்சைக்கு தோற்றிய சிலருக்கு கிழக்கு மாகாணத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட வில்லையென பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் கடந்த ஜுன், ஜுலை மாதங்களில் நேர்முக பரீட்சை நடைபெற்ற போதும் உரிய கல்வித்தராதரம், சேவை அனுபவம் என்பன காணப்பட்ட போதும் திட்டமிட்ட அடிப்படையில் பலர் புறக்கணிக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2023 செப்டம்பர் மாதம் 23ஆம் திகதியன்று ஆகக்குறைந்தது 180 நாட்கள் உள்ளூராட்சி மன்றங்களில் கடமை செய்த நிரந்தரமல்லாத சிறு பணியாளர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக பொதுநிருவாக அமைச்சின் சுற்று நிருபத்தின் அடிப்படையிலேயே கிழக்கில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது.

இந்நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதிலும் இன்னும் சிலருக்கு நியமனம் வழங்கப்படாது இருப்பதுடன் அவ்வாறு நியமனம் வழங்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன? என்பது பற்றியும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகளிடமிருந்து தகவல்களைக்கூட பெற முடியாத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தெரிவிக் கின்றனர் .

இவ்வாறு நியமனம் வழங்கப் படாதோருக்குகிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதமொன்றில் உரிய தகைமையை பெறவில்லையென மட்டும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறான தகைமையை பெறவில்லையென குறிப்பிடப்பவில்லையென பாதிக் கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிழக்கு மாகாண அதிகாரிகள் தமக்கு நடாத்தப்பட்ட நேர்முக பரீட்சையின் அடிப்படையில் நிரந்தர நியமனத்தை வழங்காது விடின் தாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப் போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு ஆகிய மாநகர சபைகளும் திருமலை, காத்தான்குடி, அம்பாறை, ஏறாவூர், கிண்ணியா நகரசபைகளும் உட்பட 37 உள்ளூராட்சி மன்றங்களில் இவ்வாறான ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

## கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவர்களின் வர்த்தக சந்தை!




(கியாஸ் ஷாபி)

கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் கைத்தொழில் தொழில் முனைவோர் வட்டத்தினால், முதல் தடவையாக வர்த்தக சந்தை (Trade Fair) ஏற்பாடு செய்யப்பட்டது. இச் சந்தை கடந்த சனிக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்வாறு, மாணவர்களினால் சுயமாக தயாரிக்கப்பட்ட யோக்கட், குடிபான ஜோக்கட், ஐஸ்கிரீம், கேக், புட்டிங், வட்டில் அப்பம், ஜேம், பால்தேநீர் போன்ற பல்வேறு வகையான உணவு வகைகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், உணவு பதப்படுத்தும் உபகரணங்களான செறிவாக்கப்பட்ட பால் தயாரிக்கும் உபகரணம், யோக்கட் தயாரிக்கும் உபகரணம், மரக்கறி மற்றும் பலவகை உலர்த்தும் உபகரணம் (Dehydrator), மரக்கறி மற்றும் பலவகை உலர்த்தும் உபகரணம் (Dehydrator) ஆகியவற்றையும், மாணவர்கள் தாமே தயாரித்து காட்சிப்படுத்தி இருந்தனர்.

கல்லூரி அதிபர் நசீரா நஜாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் திருகோணமலை பிராந்திய பணிப்பாளர் டபிள்யு.எச். திசாநாயக்க கலந்து கொண்டார்.

கல்லூரியின் தொழில் முனைவோர் வட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர் முகம்மது தாபித், இதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் செய்திருந்தார்.

## பணிப்பாளர் சபை உறுப்பினராக ஊடகவியலாளர் அறூஸ் தெரிவு



(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஞாயிற்றுகிழமை கூட்டுறவு அபிவிருத்தி சிரேஸ்ட உத்தியோகத்தர் பீ.ரீ.ஆதம்பாவா தலைமையில் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவராக சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் பொதுச்சபை உறுப்பினர்களால் தெரிவு செய் யப்பட்டார்.

கடந்த ஒருவருட காலமாக அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இடைக் கால பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டு செயற்பட்டு வந்த எஸ்.எம்.அறூஸ் கூட்டுறவுச் சங்கத்தின் சிறந்த முன்னெடுப்புகளுக்காக பல்வேறு நடவடிக்கைகளை நிர்வாகத்துடன் இணைந்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான நிலையில் பொதுச்சபை உறுப்பினர்களால் மீண்டும் பணிப்பாளர் சபை உறுப்பினராக எஸ்.எம்.அறூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளமை கூட்டுறவுச் சங்கத்தின் எழுச்சிக்கு கால்கோளாக அமையும் என பலரும் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(சுலைமான் றாபி)

நிந்தவூர் மற்றும் காரைதீவு கல்விக்கோட்டத்தின் சகல பாடசாலை களிலும் உள்ள தந்தையை இழந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கில், எலைட் அகடமி மற்றும் விங்ஸ் ஒப் ஹ்யூமானிட்டி அமைப்பினரால் பிரதான அனுசரணையில் சுமார் 170 மாணவ மாணவியர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வுகள் அண்மையில் நிந்தவூர் மற்றும் காரைதீவு பிரதேசங்களில் நடைபெற்றன.

கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர் சுலைமான் நாசிரூனின் வேண்டுகோளின் அடிப்படையில் எலைட் அகாடமியின் நிறைவேற்றுப்பணிப்பாளரும் சமூக சேவையாளருமான ரஸிதா நௌஷாதினால் குறித்த கற்றல் உபகரணங்கள் நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலய அதிபர் எஸ்.எம்.எம்.ஜாபீர் மற்றும் காரைதீவு சண்முகா மகா வித்தியாலய அதிபர் மணிமாறன் ஆகியோர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டது.

இதில் நிந்தவூர் கோட்டத்தில் தந்தையை இழந்த 109 மாணவர்களுக்கும், நிந்தவூர் கோட்டத்தில் தந்தையை இழந்த 61 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எம்.எல்.எம். முதர்ரிஸ் முதற்றிஸ், காரைதீவு கோட்டக் கல்வி அதிகாரி சஞ்சீவன், எலைட் அகாடமி நிறுவன நிறை வேற்றுப்பணிப்பாளர் எம்.நௌஷாத், திருமதி ரஸிதா நௌஷாத், முன்னாள் கிழக்கு மாகாண சுற்றுலா துறை பணிப்ப ாளர் சுலை மான் நாசிறூன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# ‘வாழ்வாதார உதவிகளை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்’




(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

தங்கள் குடும்பங்களுக்கு கிடைக்கும் தொழிலுபகரண உதவிகளை வாழ்வாதாரத்திற்காக சிறந்த முறையில் பயன்படுத்தி பொருளாதார முன்னேற்றங்களை அடைந்து கொள்ள வேண்டுமென மட்டக்களப்பு பட்டிப்பளை உதவிப் பிரதேச செயலாளர் மேனகா புவிக்குமார் தெரிவித்தார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் கூட்டு முயற்சியாண்மை உதவும் ஊக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்பின் 10 சுய தொழில் பெண் முயற்சியாளர் குடும்பங்களுக்காக வழங்கப்பட்ட தேங்காய் எண்ணெய் பிழியும் இயந்திரத்தை வழங்கி வைக்கும் நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ரீ.திலீப்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பயனாளிக் குடும்பங்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய உதவிப் பிரதேச செயலாளர் மேனகா, “இது உங்கள் பிரதேசம் உங்களுக்கான தொழில் ஊக்குவிப்பு முயற்சிகள், உங்கள் முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்கள், எனவே, இந்த வாய்ப்புக்களையும் உங்களுக்குத் தரப்படும் உதவிகளையும் நீங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

உங்கள் முன்னேற்றம் சீராக இடம்பெறுகிறதா என எங்களது உத்தியோகத்தர்கள் கண்காணிப்பார்கள். தேவையான சந்தர்ப்பத்தில் கூட்டு முயற்சியாண்மைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 10 பெண் பயனாளிக் குடும்பங்களுக்கு சுமார் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சுய தொழில் உபகரண உதவியை வழங்கிய இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்திற்கு மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.” என்றார்.

பட்டிப்பளை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பிளாந்துறை கிராம அலுவலர் வி. கேதீஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. நிதர்ஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவன களப்பணி உத்தியோகத்தர் லதா ரவீந்திரராஜா உட்பட அம்பிளாந்துறைக் கிராமத்தைச் சேர்ந்த பயனாளிக் குடும்பங்களும் பங்குபற்றினர்.

## பொத்துவில் அஸ்ஸாதீக் வித்தியாலயம் சாதனை



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பொத்துவில் கோட்ட அஸ்ஸாதீக் வித்தியாலயத்தில் 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

அஸ்ஸாதீக் வித்தியாலய அதிபர் எம்.ஏ.சி.சிஹாப்தீன், ஆரம்ப கல்வி இணைப்பாளர் ஏ.எம்.எம்.தாஜுதீன் மற்றும் கற்பித்த ஆசிரியர் எம்.கே.அஸ்வத் ஜெயின் ஆகியோர் புலமைப் பரிசிலுக்கு தெரிவாகிய மாணவர்களுடன் காணப்படுகின்றனர்.

# நுவரெலியாவில் Eagle's View Point திறந்துவைப்பு





(க.கிஷாந்தன்)

நுவரெலியாவில் உள்ள சாந்திபுர Eagle's View Point உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 6182 அடி உயரத்தில் அமைந்துள்ள இலங்கையின் மிக உயரமான கிராமமான சாந்திபுர கிராமத்தைச் சுற்றி இந்த கண்காணிப்பு தளம் கட்டப்பட்டுள்ளது.

Eagle's View Point நேற்று முன்தினம் (26) வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியின் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்காக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையை ஒரு முக்கிய மற்றும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும் முதன்மை நோக்கத்துடன் 2024 ஜுலை 31ஆம் திகதியன்று தொடங்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள், இலங்கை விமானப்படையின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது. இதற்கான நிதி பங்களிப்பை சுற்றுலா அபிவருத்தி அதிகாரசபை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் தாக்குதல் நீதி கோரி ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

தோட்டத்தில் பொது முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோரால் தாக்கப்பட்டுள்ள தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினால் நேற்று (27) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை மவுண்ட்வேர்ணன் தோட்ட தொழிற்சாலைக்கு முன்னால் திரண்ட தோட்ட சேவையாளர்கள், மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும், பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றஞ்சாட்டினார்கள்.

எனவே, க்ளீன் ஸ்ரீலங்கா போன்ற வேலைத்திட்டங்கள் வெற்றியளிக்க வேண்டுமானால் பக்கச்சார்பாக செயல்படும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதியே மேற்படி தாக்குதல் நடந்துள்ளது. பொது முகாமையாளரும், உதவி முகாமையாளரும் இணைந்து தாக்குதலில் பாதிக்கப்பட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவரும் கிளங்கன் வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்று இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதித் தலைவர் எஸ். இளையராஜா தெரிவித்துள்ளார்.

நான்கு நாட்கள் கடந்தும், இது தொடர்பில் பொலிஸார் மந்த கதியிலேயே செயல்பட்டுள்ளனர் எனவும்,நேற்றைய தினமே சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

பொது முகாமையாளர் தலைமறைவாகி இருப்பதற்கு பொலிஸார் உடந்தையாக இருந்த னரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதுபோதையில் வைத்தியரை தாக்கிய இருவர் கைது

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி தேசிய வைத்தியசாலையில் வைத்தியரை மதுபோதையில் தாக்கியதாக கூறப்படும் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் இருவர் வைத்தியசாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸ்தலைமையகத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் (26) இரவு 7.30 மணியளவில் வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான வைத்தியர் சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் முச்சக்கர வண்டியில் தேசிய வைத்திய சாலையிலிருந்து பேராதனை பிரதான வீதிக்கு செல்லும் குறுகிய வீதி ஊடாக வந்துள்ளார்.

ஆஸ்பத்திரி வளாகத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால், அந்த வீதியை தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்த அனுமதிப்பதில்லை என ஆஸ்பத்திரி நிர்வாகம் முடிவு செய்ததால், அவரை மருத்துவமனை வளாகத்திற்குள் செல்ல பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

இதன்போது வைத்தியரும் மோட்டார் சைக்கிளில் வந்திருந்தமையினால் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் முச்சக்கரவண்டி சாரதிக்கும் இடையில் ஏற்பட்ட வார்த்தைப் பிரயோகம் காரணமாக அவரது பயணம் தடைப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி சாரதி தான் வைத்தியசாலை ஊழியர் எனவும், வைத்தியசாலை ஊழியர் என்றால் அடையாள அட்டையை காட்டி வைத்தியசாலை வளாகத்திற்குள் செல்லுமாறு வைத்தியர் கூறியுள்ளார். அப்போது அந்த நபர் வைத்தியரை சரமாரியாக தாக்கியுள்ளார்.

சந்தேக நபரை வைத்தியசாலை பொலிசார் கைது செய்யவுள்ள நிலையில், அவரது சகோதரர் ஒருவரும் அவ்விடத்திற்கு வந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளார். பின்னர் அவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சம்பவத்தின் போது கண்டி, ஹந்தான கெமுனு மாவத் தையில் வசிக்கும் இருவரும் குடிபோதையில் இருந்ததாக மருத்துவ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத்தின் பணிப்புரையின் பேரில் குற்றப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் ஈ-பயணச் சீட்டு மோசடி: போதுமான பயணச்சீட்டுகள் விநியோகிக்கப்படாமையே காரணம்

(எம்.ஏ.அமீனுல்லா)

மலையகப் பாதையில் புகையிரத பயணச்சீட்டுகள் தேவைக் கேற்ப விநியோகம் செய்தாததால் காரணத்தினாலேயே பயணச்சீட்டுகள் தொடர்பான இணையதள மோசடிகள் இடம்பெற்று வருவதாக கண்டறியப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

மேலும் பயணச்சீட்டு மோசடி தொடர்பில் தொடர்ந்தும் முறையான விசாரணைக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதேவேளை, மக்களின் தேவைக்கேற்ப மலையகத்திற்கான புகையிரத பாதையில் பல புதிய வழித்தடங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (26) ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர்,

பெப்ரவரி 01ஆம் திகதி முதல் ஒவ்வொரு வார இறுதியிலும் கண்டியில் இருந்து தெமோதர வரையும் மற்றும் பெப்ரவரி 10ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரையான எல்ல ஒடிஸி ரயில் திங்கட்கிழமை தோறும் புகையிரத சேவை விஸ்தரிக்கப்படும்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5.10 மணிக்கு, கொழும்பு கோட்டையில் இருந்து கண்டி செல்லும் ரயில் திங்கட்கிழமை காலை 5.45 மணிக்கு கொழும்பு திரும்பும் வரை இரண்டு நாட்களுக்கு கண்டி புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்படும்,

பின்னர் இந்த புகையிரதம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கண்டியில் இருந்து காலை 9.00 மணிக்கு தெமோதர வரை பயணிக்கும் என்றும்,மீண்டும் மாலை 6.00 மணிக்கு தெமோதரையில் இருந்து கண்டி வரை பயணிக்கும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

மலையக புகையிரத வீதிகளுக்கான பயணச்சீட்ட மோசடிகளை வெறுமனே சட்டங்களால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது எனவும், அதற்கான அதீத தேவையுடனான குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் பொது அவ்வாறான மோசடிகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.







மாத்தளை சுபீட்சம் இந்து சமூக நலன்புரி ஒன்றியம் 12ஆவது வருடமாக தொடர்ந்து நடத்திவரும் இரத்ததான முகாம் சனிக்கிழமை (25) மாத்தளை இந்து தேசிய கல்லூரியில் இடம்பெற்றது.

மாத்தளை ஆதார வைத்தியசாயையைச் சேர்ந்த வைத்தியர்கள் விசேட வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் இரத்ததான முகாமில் சுயமாக பணிபுரிய வந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் எம்.எஸ்.எம்.மசாஹிம்)

# சிரமதானத்தில் ஏற்பட்ட தகறாரில் ஒருவர் கொலை

இரத்தினபுரி, பொல்பொக்க – ஹல்லின்ன வீதியில் நடை பெற்ற சிரமதானத்தின் போது இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறில் மண்வெட்டியால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை(26) இடம்பெற்றுள்ளது.

ஹல்லின்ன பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் 66 வயதுடைய சந்தேக நபர் ஒபநாயக்க பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

# புத்தளம் உதைபந்தாட்ட மத்தியத்தஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் உதைபந்தாட்ட மத்தியத்தஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மத்தியஸ்த்தர் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம்.பஸ்ரின் தலைமையில் நடைபெற்ற இந்த வருடாந்த பொதுக்கூட்டத்தில் மத்தியஸ்த்தர் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

புத்தளம் உதைபந்தாட்ட லீக்கின் உயர் பீட உறுப்பினரும், சிரேஷ்ட உதைபந்தாட்ட நடுவரும், உடற்கல்வி போதனாசிரியருமான கலாநிதி எஸ்.ஆர்.எம்.ஆஸாத் இந்நிகழ்வுதனை நெறிப்படுத்தினார்.

எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

பின்னர் பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகக் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# ஸ்லோவேக்கியா பிரஜை ஓட்டிய முச்சக்கரவண்டி விபத்து இருவர் படுகாயம்

(க.கிஷாந்தன்)

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி சென்ற முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஸ்லோவேக்கியா நாட்டைச் சேர்ந்த இருவர் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை குயில்வத்த பகுதியில் (26) பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட முச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த இருவரில் ஒருவர் முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்றதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகவேகத்தில் முச்சக்கவண்டியை செலுத்தியதாலேயே, முச்சக்கரவண்டியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.விபத்தில் காயமடைந்த ஸ்லோவேக்கியா நாட்டைச் சேர்ந்த இருவரும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், விபத்தில் முச்சக்கரவண்டி கடும் சேதமடைந்துள்ளதாகவும் வட்டவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன கமகே தெரிவித்தார்.





***தரம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய கமு/ கமு/ அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தின் 45 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் 197 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி, 45 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு அதிகமாக புள்ளி பெற்று சித்தி அடைந்துள்ளனர். 70 புள்ளிகளுக்கு அதிகமாக 95.85% மாணவர்கள் புள்ளிகளை பெற்று சித்தியடைந்திள்ளனர்.***

***(படங்கள் நூருல் ஹுதா உமர்)***

## ‘கில்லியன் சிண்ட்ரோம்’ நோய்:

# மகாராஷ்டிராவில் 100 பேர் பாதிப்பு : ஒருவர் மரணம்

மகாராஷ்டிராவில் “கில்லியன் பேர் சிண்ட்ரோம்“ நோய் பாதிப்பு ஏற்பட்டு ஒருவர் உயிரிழிந்திருப்பதாக முதற்கட்ட மருத்துவ ஆய்வறிக்கையில்




தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் புனேவில் இந்நோய் பாதிப்பு ஏற்பட்டவர்கள் எண்ணிக்கை 100ஐ கடந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது. குறித்த இறப்பானது மகாராஷ்டிராவின் சோலாபூர் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது. இந்நிலையில் குறித்த நோய்த்தொற்று க்குள்ளான நபர் தனிப்பட்ட வேலைகளு க்காக சொந்த கிராமத்துக்குச் சென்ற வேளையிலேயே அவருக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சளி, இருமலால் பாதிக்கப் பட்ட அவர் பின்னர் மூச்சுத் திணறல் காரண மாக கடந்த 18 ஆம் திகதி சோலாப்பூரில் ஒரு தனியார் மருத்து வமனையில் அவர் அனுமதி க்கப்பட்டுள்ளார். முதலில்



அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக் கப்பட்ட அவர் பின்னர் சாதாரண சிகிச் சைப்பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்துள்ளார். ஆயினும் மீண்டும் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரண மாக அவசர சிகிச்சைப்பிரிவுக்கு மாற்றப்பட்ட வேளையிலேயே அவர் உயிரிழந்தாக மருத்துவ அறிக்கையில் தெரியவந்துள்ளது. இது குறித்து மகாராஷ்டிரா மாநிலம் சோலாபூர் மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் சஞ்சீவ் தாக்கூர் கூறுகையில், “அவர் ஐந்து நாள் சிகிச்சை பெற்றும் கூட நோய்க்கு பலியாகியுள்ளார். எனவேதான் அறிக் கை ணயின் படி கில்லியன் – பேர் சிண்ட்ரோம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றார்.

## பாடசாலை காலை உணவு:

# தனியாரிடம் ஒப்படைப்பதா?: அன்புமணி ராமதாஸ் கேள்வி

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கு பரிமாறப்படும் காலை உணவை தயாரித்து வழங்கும் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது. இதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களின் நலன்களுக்கு எதிரான தி.மு.க. அரசின் இந்த முடிவு கண்டிக்கத்தக்கது என அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கான காலை உணவை இப்போது அம்மா உணவகங்கள் உள்ளிட்ட மையப்படுத்தப்பட்ட சமையலறைகளில் மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்து வழங்குகின்றனர். அதனால், குழந்தைகளுக்கு ஓரளவு தாமதமின்றி மாணவர்களுக்கு உணவு கிடைக்கிறது. இந்தத் திட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்றால் சத்துணவு தயாரிக்கப்படுவதைப் போல பாடசாலைகளிலேயே காலை உணவையும் தயாரித்து வழங்குவது தான் சரியானதாக இருக்கும். அதற்கு மாறாக இந்தப் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால் அது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்றார்.




## மருதமலை பட பாணியில்

# சிக்னலில் பிச்சை எடுத்தவர் அதிரடியாக கைது

மாநிலத்தை பிச்சைக்காரர்கள் இல்லாத நகரமாக மாற்ற அரசு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவ்வகையில் மத்திய பிரதேசத்தில் பிச்சை எடுப்பதும், பிச்சை போடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

பிச்சை எடுப்பதற்கான தடையை மீறுவோர் மீது பாரதிய நியாய் சன்ஹிதா சட்டத்தின் 223ஆவது பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ஒரு வருடம் வரை



சிறை தண்டனையும், 5,000 ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், மத்தியபிரதேச மாநில தலைநகர் போபாலில் சாலை சிக்னலில் பிச்சை எடுத்த நபரை பொலிசார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

பிச்சை எடுத்தவரிடம் மாற்று வேலை தருவதாகவும் பிச்சை எடுப்பதை கைவிடுமாறும் பொலிசார் தெரிவித்துள்ளனர். அதனை அவர் ஏற்காததால் பிச்சைக்காரர்கள் தடுப்பு சட்டத்தில் அவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## வேலை பறிபோனதும்... கல்யாணம் நின்றுபோனது...

# சைஃப் அலி கான் வழக்கில் தவறாக கைதான இளைஞர் உருக்கம்

மும்பை பொலிசார் என் வாழ்வை சிதைத்து விட்டனர் என சயீப் அலிகான் வழக்கில் கைதாகி விடுவிக்கப்பட்ட நபர் வேதனையாக தெரிவித்துள்ளார். மும்பை பாந்த்ரா பகுதியில் சத்குரு ஷரணில் உள்ள 12ஆவது மாடி வீட்டில் நடந்த கொள்ளை





முயற்சியின் போது, சைஃப் அலி கானை ஒருவர் கத்தியால் குத்தி தாக்கினார். இதன் காரணமாக அவர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து மும்பை பொலிஸார் சிசிடிவியில் பதிவான நபரை தனிப்படை அமைத்து தேடிவந்தனர்.

சைஃப் அலி கானை கத்தியால் குத்தியவர் என்று சந்தேகத்தின்பேரில் முகமது ஷரிபுல் என்ற வங்கதேச நபரை பொலிசார் கைது செய்தனர். முன்னதாக சிசிடிவி காட்சிகளில் உள்ள நபரின் முக தோற்றத்தை ஒத்திருத்த சிலரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரித்தனர்.

அதில் மும்பையில் மேற்கு மண்டல புகையிரத்தில் இயங்கும் சுற்றுலா நிறுவனத்தில் சாரதியாக பணிபுரிந்த ஆகாஷ் கனோஜியாஜ (31) என்ற நபர் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கடந்த நிலையில் மும்பை பொலிசாரால் கைது செய்யப்பட்டார். சில மணி நேர விசாரணைக்குப் பின் அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் இந்த ஒரு கைது ஆகாஷ் கனோஜியா வாழ்வையே புரட்டிப் போட்டுள்ளது.

அதாவது மும்பை பொலிசார் என் வாழ்வை சிதைத்து விட்டனர் என்று ஆகாஷ் கனோஜியா குற்றம்சாட்டியுள்ளார்.

எனது புகைப்படங்கள் தொலைக்காட்சியில் வெளியானதால் என்னை வேலையில் இருந்து நீக்கிவிட்டனர். அதேபோன்று நிச்சயிக்கப்பட்ட திருமணம் நின்றுவிட்டது. இதன் காரணமாக எனது குடும்பமே அவமானத்தைச் சந்தித்துள்ளது என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

## மகா கும்பமேளா:

# பெண்களை காணொளி எடுத்த சாமியாருக்கு விழுந்த தர்ம அடி

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பெண்கள் உடை மாற்றுவதை செல்போனில் வீடியோவாக படம் பிடித்த நிர்வாண சாமியார் ஒருவர் வசமாக சிக்கினார். பெண்கள் உடை மாற்றுவதை படம் பிடித்து சிக்கிய நிர்வாண சாமியாரை பொதுமக்களும் பொலிசாரும் அடித்து துவைத்தெ டுக்கும் காணொளி ஒன்று சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது. உத்தரப்பிரதேச மாநிலம் பிரக்யாராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாளும் பல இலட்சம் பக்தர்கள் புனித நீராடி வருகின்றனர். அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், திரை பிரபலங்கள் பலரும் மகா கும்பமேளா யாத்திரைக்கு சென்று புனித நீராடுகின்றனர்.





இந்த கும்பமேளா காலத்தில் மட்டும் வெளியே வரும் பல்லாயிரக்கணக்கான நிர்வாண சாதுக்கள், பிரக்யாராஜில் குடில்கள் அமைத்து முகாமிட்டுள்ளனர். அண்மையில் சாது ஒருவரிடம் பேட்டி ஒன்றை எடுத்துக் கொண்டிருந்வரை அந்த சாது கொடூரமாக தாக்கி விரட்டி அடிக்கும் காணொளி ஒன்று வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் மகா கும்பமேளாவின் திரிவேணி சங்கமத்தின் புனித நீராடிவிட்டு பெண் யாத்ரீகர்கள் உடை மாற்றும் பகுதியில் நடமாடிய நிர்வாண சாதுவின் செயல் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அப்போதுதான் பெண்கள் உடை மாற்றுவதை அந்த நிர்வாண சாமியார் தனது கைப்பேசியில் காணொளியாக பதிவு செய்திருந்தது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் யாத்திரிகர்கள் அந்த சாமியாரை அடிக்கத்தொடங்கியதும் அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிசாரிடமும் புகார் தெரிவித்தனர். இந்நிலையில் குறித்த சாமியாருக்கு பொலிஸாரும் இணைந்து தர்ம அடிகொடுத்துள்ளனர்.

**13 கோடி பேர் புனித நீராடல்**

உத்தர பிரதேசத்தில் 14 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த 13ஆம் திகதி அரம்பமாகி பெப்ரவரி 26ஆம் திகதிவரை 45 நாட்கள் மகா கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உள்ளது.

இதற்காக 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. 1,800 ஹெக்டேர் பரப்பளவில் வாகன நிறுத்த வசதிகள், 2,750 கண்காணிப்பு கேமராக்கள், 15 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள், 25 ஆயிரம் தொழிலாளர்கள், 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்டவற்றை அரசு அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனுஷின் வாழ்த்தால் கோபமான அஸ்வின்!




இந்தியாவின் 76ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்தது. குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்த அஜித்துக்கு பத்மபூஷன் விருது, கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்கு பத்மஶ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அஸ்வினுக்கு நடிகர் தனுஷ் வாழ்த்து தெரிவிக்க அதில் இரசிகர் ஒருவர் கொடுத்த பதிலால் கோபமடைந்த அஸ்வின் “டேய் பைத்தியம” என கடுமையாக விமர்சித்துள்ளார்.

குடியரசு தின விழாவை முன்னிட்டு மத்திய அரசு ஆண்டுதோறும் நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகளை அறிவிக்கும். கலை, அறிவியல், மருத்துவம், இலக்கியம், வர்த்தகம் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு பத்மஶ்ரீ, பத்மபூஷன், பத்ம விபூஷன் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுவருகிறன,

அந்த வகையில் இந்த ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த 13 பேருக்கு பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதியோர் இல்லத்தில் மலர்ந்த காதல்.. கல்யாணத்தில் முடிந்தது

அசாம் மாநிலம் கவுகாத்தியில் வித்தியாசமான திருமணம் ஒன்று நடைபெற்றுள்ளது. அதாவது முதியோர் இல்லமொன்றில் இருந்த 71 வயது தாத்தா ஒருவருக்கு அதே இல்லத்தில் வசித்து வந்த 65 வயது பெண்மீது காதல் ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தை மேற்படி இருவரும் இல்ல நிருவாகிகளிடம் தெரிவித்த போது குறித்த இல்ல நிருவாகிகள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்துள்ளனர். இந்த வித்தியாசமான திருமணத்தை பார்த்த இணையவாசிகள், மணமக்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகிறார்கள்.

இன்றைய சூழலில், தூய்மையான காதலாக இருந்தாலும், அது தோல்வியடைந்துவிடும் பட்சத்தில், திருமணமாகி, கணவனை இழந்த ஒரு பெண் மறுமணம் செய்து கொள்வது என்பது அவ்வளவு எளிது கிடையாது. கணவன், மனைவியை பறிகொடுத்துவிட்டு தனிமையிலுள்ள, தங்களது தாய் அல்லது தந்தைக்கு திருமணம் செய்து வைக்கும் அளவுக்கு இன்றைய பிள்ளைகளிடையே மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.



# கொலம்பியா மீது அமெரிக்கா வர்த்தகத் தடை: ட்ரம்ப் எச்சரிக்கை

கொலம்பியா மீது 25% வரிகள் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

கொலம்பியாவில் இருந்து அமெரிக்காவிற்கு வரும் அனைத்து பொருட்கள் மீதான கட்டணங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படும் என்றும், ஒரு வாரத்தில் 25% கட்டணங்கள் 50% ஆக உயர்த்தப்படும் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

அது தவிர கொலம்பிய அரசாங்க அதிகாரிகள் மற்றும் அதன் கூட்டாளிகள் மற்றும் ஆதரவாளர்கள் மீது அமெரிக்கா பயணத் தடை மற்றும் ”உடனடி விசா இரத்துகளை” விதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்பட்ட புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற இரண்டு அமெரிக்க இராணுவ விமானங்களை கொலம்பியாவில் தரையிறக்கக் கூடாது என அந் நாட்டு ஜனாதிபதி தடை விதித்ததை அடுத்து ட்ரம்பின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இதேவேளை, இலத்தீன் அமெரிக்காவில் மூன்றாவது பெரிய அமெரிக்க வர்த்தக பங்காளியான கொலம்பியா, ட்ரம்ப்பின் இந்த அறிவிப்புக்கு விரைவாக பதிலளித்தது.

ட்ரம்பின் அறிவிப்பின் சில மணி நேரங்களுக்கு பின்னர் கொலம்பியாவின் இடதுசாரி



ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, அமெரிக்க இறக்குமதிகள் மீதான வரிகளை 25மூ உயர்த்துமாறு வர்த்தக அமைச்சகத்திற்கு உத்தரவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

“அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு எங்கள் மனித உழைப்பின் பலன்களுக்கு நீங்கள் 50% வரி விதிக்கிறீர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது, நானும் அதையே செய்கிறேன்” என பெட்ரோ ட்ரம்பை இலக்காகக் கொண்ட எக்ஸ் சமூக வலைத்தளப் பதிவில் இதனைக் குறிப்பிட்டார்.

பெட்ரோ முன்னதாக நாட்டை நோக்கிச் செல்லும் புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் செல்லும் இரண்டு அமெரிக்க இராணுவ விமானங்களைத் தடுத்துள்ளதாக அறிவித்தார். மேலும் புலம்பெயர்ந்தோரை நடத்துவதில் சிறந்த நெறிமுறைகளை நிறுவுமாறு அமெரிக்காவிற்கு அழைப்பு விடுத்தார்.

புலம்பெயர்ந்த நாடுகடத்தப்பட்டவர்களுடன் ஞாயிற்றுக்கிழமை சான் டியாகோவிலிருந்து இரண்டு இராணுவ விமானங்கள் கொலம்பியாவில் தரையிறங்கவிருந்ததாகவும், ஆனால் சிக்கல்கள் காரணமாக அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பெலாரஸ் தேர்தலில்

# மீண்டும் ஜனாதிபதியானார் லூக்கா 31 வருடங்களாக தொடரும் ஆட்சி

பெலாரசியத் தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ தனது 31 ஆண்டுகால ஆட்சியை ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியுடன் நீட்டித்தார்.

“நீங்கள் பெலாரஸ் குடியரசை வாழ்த்தலாம், நாங்கள் ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்துள்ளோம்” என்று நாட்டின் மத்திய தேர்தல் ஆணையத்தின் குடியரசுத் தலைவர் இகோர் கார்பென்கோ திங்கட்கிழமை அதிகாலை ஒரு செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார் என்று ரஷ்ய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.



மத்திய தேர்தல் ஆணையத்தின் டெலிகிராம் கணக்கில் வெளியிடப்பட்ட முடிவுகளின்படி, ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் லுகாஷென்கோ 86.8% வாக்குகளைப் பெற்றுள்ளார்.

முன்னாள் சோவியத் மாநிலத்தில் சுதந்திர ஊடகங்கள் தடை செய்யப்பட்டுள்ளதால், அனைத்து முன்னணி எதிர்க்கட்சி பிரமுகர்களும் தண்டனைக் காலனிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், வாக்களிப்பு சுதந்திரமானதாகவோ அல்லது நியாயமானதாகவோ இல்லை என்று ஐரோப்பிய அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

“பெலாரஸ் மக்களுக்கு வேறு வழியில்லை. சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்காக ஏங்கும் அனைவருக்கும் இது ஒரு கசப்பான நாள்” என்று ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் அன்னலெனா பேர்பாக் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நெருங்கிய கூட்டாளியான இவர், எதிர்ப்பாளர்களை சிறையில் அடைத்ததை ஆதரித்து, “நான் மேற்குலகைப் பற்றிக் கவலைப்படவில்லை” என அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனா- இந்திய உறவுகளில் ஸ்திரத்தன்மை : பீஜிங் வெளியுறவு அமைச்சர்

சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளும் ஒரே திசையில் செயல்பட வேண்டும், மேலும் கணிசமான நடவடிக்கைகளை ஆராய வேண்டும் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுக்கு உறுதியளிக்க வேண்டும் என சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யி திங்கட்கிழமையன்று இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரியிடம் தெரிவித்தார்.

சீனாவும் இந்தியாவும் “சந்தேகம்” மற்றும் ”அந்நியம்” என்பதற்குப் பதிலாக ”பரஸ்பர ஆதரவு மற்றும் பரஸ்பர சாதனைக்கு” உறுதியளிக்க வேண்டும் என பீஜிங்கில் திங்கட்கிழமை (27) நடந்த இரு அதிகாரிகளின் சந்திப்பின் போது வாங்யி தெரிவித்தார். கிழக்கு லடாக்கில் உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் (LAC) நீடித்த இராணுவ நிலைப்பாட்டின் காரணமாக இரு நாடுகளும் சிதைந்த இருதரப்பு உறவுகளை சரிசெய்ய முற்படுகையில் மிஸ்ரியின் சீன விஜயம் ஒரு மாதத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான இரண்டாவது உயர்மட்ட ஈடுபாட்டைக் குறிக்கிறது.

கசானில் நடந்த பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இடையே கடந்த ஆண்டு நடந்த சந்திப்பிலிருந்து ஏற்பட்ட முன்னேற்றம் உறவுகளை மேம்படுத்துவதற்கான அடித்தளமாக அமைந்துள்ளதாக வாங் யி இதன்போது மேற்கொள்ளிட்டு காட்டினார். ஞாயிற்றுக்கிழமை பீஜிங்கிற்கு விஜயம் மேற்கொண்ட மிஸ்ரி, சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறையின் தலைவர் லியு ஜியான்சாவோவைச் சந்தித்தார்.

சீன அரசு நடத்தும் குளோபல் டைம்ஸ ின் கூற்றுப்படி, இரு அதிகாரிகளும் தங்கள் தலைவர்களால் எட்டப்பட்ட



ஒப்பந்தங்களைச் செயல்படுத்துதல், உரையாடல்களை மேம்படுத்துதல் மற்றும் சீனா–இந்திய உறவுகளில் ஸ்திரத்தன்மையை வளர்ப்பது குறித்து கருத்துக்களை இதன்போது பரிமாறிக் கொண்டனர்.

## தென்கொரிய விமான விபத்து;

# விமான என்ஜின்களில் பறவை இறகுகள் கண்டுபிடிப்பு

கடந்த டிசம்பர் மாதம் தென்கொரியாவில் விபத்துக்குள்ளாகி 179 நபர்களின் மரணத்துக்கு வழி வகுத்த பயணிகள் விமானம் மீது பறவை மோதியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜெஜு ஏர் விமானத்தின் இரண்டு என்ஜின்களிலும் வாத்து வகையைச் சேர்ந்த பறவைகளின் இறகுகள் மற்றும் இரத்தக் கறைகள் காணப்பட்டிருந்தாக திங்கட்கிழமையன்று (27) வெளியிடப்பட்ட முதற்கட்ட விசாரணை அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையானது விபத்துக்குள்ளான விமானத்தின் பறவை தாக்குதலின் பங்கு மற்றும் விமானம் ஓடுபாதையின் முடிவில் அமைக்கப்பட்டிருந்த கொன்கிரீட் சுவர் என்பவற்றின் முக்கிய பங்கினை எடுத்துக் காட்டுகிறது.



ஜெஜு ஏர் விமானம் டிசம்பர் 29 அன்று காலை தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து புறப்பட்டு தென்கொரியாவின் தென்மேற்கில் உள்ள முவான் சர்வதேச விமான நிலையத்திற்கு பறந்து கொண்டிருந்தது.

தென்கொரிய நேரப்படி காலை சுமார் 08:57 மணிக்கு, விமானிகள் விமான நிலையத்துடன் தொடர்பு கொண்ட மூன்று நிமிடங்களுக்குப் பின்னர் கட்டுப்பாட்டு கோபுரம் ”பறவை செயல்பாடு” குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பணியாளர்களுக்கு அறிவுறுத்தியது. 08:59 மணிக்கு, விமானம் ஒரு பறவையைத் தாக்கிய சமிக்ஞையை வெளியிட்டதாக விமானி அறிவித்தார்.

இதனால் முவான் சர்வதேச விமான நிலையத்தில் விமானம், தரையிறங்கும் கியர் பயன்படுத்தப்படாமல் அவசரமாக தரையிறங்கியதால் ஓடுபாதையைத் தாண்டி லோக்கலைசர் கட்டமைப்பில் மோதி வெடித்து விபத்துக்குள்ளானதாக அறிக்கை தெரிவிக்கிறது.

இதன்போது விமானத்தில் பயணித்த 181 பேரில் பணியாளர்கள் இருவரைத் தவிர ஏனைய அனைவரும் உயிரிழந்தனர். இது தென்கொரிய மண்ணில் பதிவான மிகவும் மோசமான விமான விபத்தாகவும் பதிவானது.

பேரழிவிற்கு நான்கு நிமிடங்களுக்கு முன்பு விமானத்தில் இருந்து விமான தரவு மற்றும் காக்பிட் குரல் பதிவுகள் பதிவு செய்வதை நிறுத்தியதாக அதிகாரிகள் முன்னதாக தெரிவித்தனர். விபத்தில் சிக்கிய அதே வகை விமானங்களை செலுத்திய விமானிகள், ஓடுபாதையில் கொன்கிரீட் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்ததையும் கேள்வி எழுப்பினர் – சிலர் தடுப்புச் சுவர் இல்லாவிட்டால் உயிரிழப்பு எண்ணிக்கை கணிசமாக குறைந்திருக்கும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த வாரம், நாடு முழுவதும் உள்ள ஏழு விமான நிலையங்களில் வழிசெலுத்தலுக்கு பயன்படுத்தப்படும் கொன்கிரீட் தடைகளை மாற்றுவதாக அதிகாரிகள் அறிவித்தனர்.

மறுஆய்வுக்குப் பின்னர் ஏழு விமான நிலையங்களும் அவற்றின் ஓடுபாதை பாதுகாப்புப் பகுதிகளை மாற்றியமைக்கும் என தெரிவித்திருந்தனர்.

# கொங்கோ நகரம் கிளர்ச்சியாளர்கள் வசம்

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதியில் உள்ள கோமா நகரை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக எம்23 (E23) இயக்கத்தின் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை கொங்கோ இராணுவத்திற்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து எம்23 கிளர்ச்சியாளர்கள் கோமாவின் முக்கிய வீதிகளில் ரோந்து செல்லும் வீடியோக்களை குடியிருப்பாளர்கள் பகிர்ந்து கொண்டனர். இது பல்லாயிரக்கணக்கான மக்கள் அயல் நகரங்களை விட்டு வெளியேறுவதைக் காண்பித்தது.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் கோமாவின் தெருக்களில் பல மணிநேர துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிப்புகளுக்குப் பிறகு இப்போது அமைதியாக இருப்பதாக உள்ளூர் ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எம்23 கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக ருவாண்டா தனது துருப்புக்களை எல்லையில் அனுப்பியதன் மூலம் போரை அறிவித்ததாக கொங்கோவின் வெளியுறவு அமைச்சர் குற்றம் சாட்டிய சில மணிநேரங்களுக்குப் பிறகு இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கிகாலியில் ஆட்சி மாற்றத்தை விரும்பும் போராளிகளை கின்ஷாசா ஆதரிப்பதாக ருவாண்டா தெரிவிக்கிறது. கென்யா போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் மேலும் கொங்கோ மற்றும் ருவாண்டா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களும் அடுத்த இரண்டு நாட்களில் அவசர பிராந்திய உச்சி மாநாட்டில்



கலந்து கொள்வார்கள் என அறிவித்தது. கிழக்கு ஆபிரிக்க சமூகத்தின் தற்போதைய தலைவரான கென்ய ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ, மோதலுக்கு அமைதியான தீர்வுக்கு உதவுவது பிராந்திய தலைவர்களின் கடமையாகும் என்றார்.

எம்23 குழு 2021 ஆம் ஆண்டு முதல் கனிம வளங்கள் நிறைந்த கிழக்கு கொங்கோவின் பரந்த பகுதிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. கடந்த சில வாரங்களாக இந்த குழு தீவிர சண்டைக்கு மத்தியில் கோமாவில் வேகமாக முன்னேறி வருகிறது. கோமாவைச் சுற்றியுள்ள முக்கிய வீதிகள் தடுக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 400,000 இற்கும் அதிகமான மக்கள் வடக்கு மற்றும் தெற்கு கிவு, ருவாண்டாவின் எல்லைக்கு அருகில் உள்ள மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐநாவின் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.



## 2025 சம்பியன்ஸ் கிண்ணம்

# மேற்கிந்தியதீவுகள், இலங்கை பங்கேற்கவில்லை

2025 சம்பியன்ஸ் தொடரில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை அணிகள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தொடர் பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த தொடரில் எட்டு அணிகள் பங்கேற்கவுள்ளன. அதே சமயம் இதற்கு முன் ஒருநாள் போட்டி உலகக் கிண்ணத்தை வென்ற இந்த இரண்டு அணிகள் இந்த தொடரில் பங்கேற்கவில்லை.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரும் ஒருநாள் போட்டிகள் வடிவில் நடைபெறும் தொடர் எனும் நிலையில் இரண்டு உலகக் கிண்ணம் வென்ற அணிகளுக்கு இடம் அளிக்கப்படாதது ஏன்?

2023 உலகக் கிண்ணத் தொடர் தான். இதற்கு முன் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான அணிகளை தேர்வு செய்வது என்பது ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசையின் படி அமைந்தது.

ஆனால் 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான தேர்வு 2023 ஒருநாள் போட்டி உலகக் கிண்ணத்தை ஒட்டி அமைந்தது. அந்த உலகக் கிண்ணத் தொடரில் 10 அணிகள் பங்கேற்கின்றன. அந்த அணிகளில் லீக் சுற்றில் முதல் எட்டு இடங்களை பிடிக்கும் அணிகள் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெறும் என்ற நிலை இருந்தது.

அதன்படி அந்த லீக் சுற்றின் புள்ளிப் பட்டியலில் முதல் எட்டு இடங்களை பெற்ற இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்,பங்ளாதேஷ் மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்க தகுதி பெற்றன. இதில் பாகிஸ்தான் அணி சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை நடத்தும் அணி என்ற வகையில் முன்னதாகவே தகுதி பெற்று இருந்தது.

இதற்கு முன் உலகக் கிண்ணம் வென்றிருந்த மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை அணிகள் 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு முன்னேறவில்லை. இதில் மேற்கிந்திய தீவுகள் அணியின் நிலைமை படுமோசமாக இருந்தது. 2023 உலகக் கிண்ணத் தொடருக்கே மேற்கிந்திய தீவுகள் தகுதி பெறவில்லை.

முதலில் ஒருநாள் போட்டி தரவரிசையில் மேற்கிந்திய தீவுகள் அணி பின்தங்கி இருந்ததால் 2023 உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெறவில்லை. அதன் பின்னர் உலகக் கிண்ண தகுதிச்சுற்று போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி ஆடியது. அதிலும் தோல்வி அடைந்ததை அடுத்து மேற்கிந்திய தீவுகள் அணியால் 2023 உலகக் கிண்ணத்தில் ஆட முடியவில்லை. அதனால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலும் மேற்கிந்திய தீவுகள் அணி இடம் பெற முடியாமல் போனது.

அதேவேளை 1996 ஒருநாள் போட்டி உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணி இந்த முறை 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறவில்லை. 2023 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி லீக் சுற்றின் முடிவில் ஒன்பதாவது இடத்தை பிடித்தது தான் இதற்கு காரணம். முதல் எட்டு இடங்களில் இடம்பிடித்த அணிகளுக்கு மட்டுமே சம்பியன்ஸ் கிண்ணத்தில் வாய்ப்பு எனும் நிலையில் இலங்கை அணி, 2023 உலகக் கிண்ணத்தில் ஒன்பது போட்டிகளில் இரண்டு வெற்றிகளை மட்டுமே பெற்று புள்ளிப் பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் இருந்தது. அதனால் வாய்ப்பை இழந்தது.




## மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப்

# இலங்கைக்கு இரண்டாமிடம்

மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சம்மேளத்தின் அனுசரணையில் இலங்கை கரப்பந்தாட்ட கூட்டமைப்பு ஏற்பாடு செய்த மத்திய ஆசிய கடற்கரை கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப், போட்டியில் இலங்கை 3 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் பெண்கள் வெண்கலப் பதக்கமும் அடங்கும்.




6 நாடுகளைச் சேர்ந்த 18 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில்,நீர்கொழும்பு கடற்கரை பூங்காவில் நடைபெற்ற போட்டியில் ஆண்களுக்கான தங்கப் பதக்கத்தை ஈரானிய விளையாட்டு வீரர்கள் வென்றனர். அதே நேரத்தில் கஜகஸ்தான் விளையாட்டு வீரர்கள் பெண்களுக்கான தங்கப் பதக்கத்தை வென்றனர்.

இந்தப் போட்டியில் இலங்கையிலிருந்து தலா மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் அணிகள் பங்கேற்றன, மேலும் இலங்கையிலிருந்து “ஏ” அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திலீப சாமிக சேனாரத்ன மற்றும் மலித் தில்ஷான் சில்வா ஆகியோர் ஆண்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றனர். இந்தப் போட்டியில் ஈரான் அணி 2-0 என்ற கணக்கில் ஈரானின் அமீர் அலி கலேனோவி மற்றும் அபோல்ஹாசன் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. ஸ்கோர் 21-13 மற்றும் 21-13 ஆக இருந்தது. போட்டியில் மூன்றாவது இடத்திற்காக கஜகஸ்தானுக்கு எதிராகப் போட்டியிட்ட சந்துன் மதுஷங்கா மற்றும் அஞ்சனா சந்தீபனா (அணி “பி”), 2-1 (20-22, 21-18 மற்றும் 15-10) என்ற கணக்கில் தோல்வியடைந்து நான்காவது இடத்தைப் பிடித்தனர். இலங்கை “சி” அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய நலின் பெரேரா மற்றும் மதுஷா விக்ரமசிங்கே ஆகியோரால் காலிறுதிக்கு அப்பால் முன்னேற முடியவில்லை.

மகளிர் இறுதிப் போட்டியில், இலங்கை “ஏ” அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் தீபிகா பண்டார மற்றும் கசுனி தாருகா ஜோடி, கஜகஸ்தானின் காபுல்பெகோவா மற்றும் இவான்சென்கோ ஜோடியை 2-0 (21-11 மற்றும் 21-17) என்ற கணக்கில் தோற்கடித்து தங்கப் பதக்கத்தை வென்றது. இந்தப் போட்டியில் மூன்றாவது இடத்திற்காக இரண்டு இலங்கை அணிகள் போட்டியிட்டன, அதில் “டீ” அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஷெஹானி அசங்க மற்றும் சதுரிகா மதுஷானி, வசனா மதுமாலி மற்றும் கசுனி கேஷலா (அணி “ஊ”) அணியை 2-0 (21-15 மற்றும் 21-19) என்ற கணக்கில் தோற்கடித்தனர். போட்டியின் வெற்றிச் சின்னங்களை மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் முகமது லத்தீப், இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவரும் தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் துணைத் தலைவருமான காஞ்சனா ஜெயரத்ன ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.

# ஜுனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை: இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி

2-வது ஜுனியர் மகளிர் ரி20 உலகக் கிண்ணத் தொடர் (19 வயதுக்கு உட்பட்டோர்) மலேசியாவில் நடந்து வருகிறது.




இதில் பங்கேற்றுள்ள 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதின. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடித்த அணிகள் 12 அணிகள் சூப்பர் 6 சுற்றுக்கு முன்னேறின. 12 அணிகளும் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி குரூப் 1-ல் இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை,பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து, மேற்கிந்திய தீவுகள் அணிகளும், குரூப் 2-ல் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, அமெரிக்கா, நைஜீரியா, அயர்லாந்து, நியூசிலாந்து அணிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்த சுற்றில் ஒரு அணி தங்கள் பிரிவில் உள்ள குறிப்பிட்ட இரு அணிகளுடன் மட்டும் மோதும். இந்த சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும் சூப்பர் 6 சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இந்நிலையில் நடப்பு சம்பியான இந்திய அணி தனது முதலாவது சூப்பர் 6 சுற்று ஆட்டத்தில் பங்களாதேஷை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. ஏற்கனவே லீக் சுற்றில் இருந்து 4 புள்ளிகளை கொண்டு வந்திருந்த இந்திய அணி தற்போதைய வெற்றியுடன் சேர்த்து மொத்தம் 6 புள்ளிகளை பெற்றிருக்கிறது.

இதே பிரிவில் நடக்க இருந்த இலங்கை – ஸ்கொட்லாந்து இடையிலான ஆட்டம் மழையால் ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளும் தலா ஒரு புள்ளியை பெற்றன. இந்த ஆட்டத்தில் முடிவு கிடைக்காமல் போனதன் மூலம் குரூப்1-ல் இருந்து இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் (தலா 6 புள்ளி) அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இந்திய அணி தனது கடைசி ஆட்டத்தில் இன்று ஸ்கொட்லாந்தை எதிர்கொள்கிறது.

# அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன்ஷிப்பை வென்றார் ஜானிக் சின்னர்



ஜானிக் சின்னர் ஞாயிற்றுக்கிழமை (26) தனது இரண்டாவது தொடர்ச்சியான அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன்ஷிப்பைக் கைப்பற்றினார்.

மெல்போர்ன் ராட் லேவர் அரங்கில் நடந்த இறுதிப் போட்டியில், தனது முழுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி உலகின் நம்பர் 2 வீரரான அலெக்சாண்டர் ஸ்வெரேவை 6-3, 7-6 (4), 6-3 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

23 வயதான இத்தாலியரான சின்னர், 1992-93 இல் ஜிம் கூரியருக்குப் பின்னர் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்துடன் மெல்போர்னை விட்டு வெளியேறிய இளைய வீரர் ஆவார்.

கடந்த ஜுன் மாதத்தில் சின்னர் உலகின் நம்பர் 1 வீரர் என்ற நிலைக்கு உயர்ந்தார். பின்னர், அவர் ஒவ்வொரு வாரமும் தொடர்ச்சியாக தனது நிலையை தக்க வைத்துக் கொண்டார்.

2019 ஆம் ஆண்டு முதல் தரவரிசையில முதலாவது மற்றும் 2 ஆவது இடத்தில் இருக்கும் ஆண்களுக்கு இடையே நடைபெற்ற முதல் அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டி இதுவாகும். 2019 ஆம் ஆண்டு நம்பர் 1 இடத்திலிருந்த நோவக் ஜோகோவிச் 2 ஆம் நிலை வீரரான ரஃபேல் நடால் 6-3, 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்திருந்தார்.

கடந்த செப்டம்பரில் நடந்த அமெரிக்க ஓபன் உட்பட ஐந்து பெரிய போட்டிகளில் மூன்றை இத்தாலிய வீரர் ஜானிக் சின்னர் வென்றுள்ளார்.

இதேவேளை சனிக்கிழமை (25) நடைபெற்ற மகளிருக்கான அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் மேடிசன் கீஸ், மூன்று பரபரப்பான செட்களில் உலகின் நம்பர் 1 வீராங்கனையான அரிசானா சபலெங்காவை வீழ்த்தி சம்பியன் ஆனார்.

29 வயதான அமெரிக்க வீராங்கனை அவுஸ்திரேலிய ஓபனில் பெறும் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும்.

19 ஆம் நிலை வீராங்கனையான கீஸ், இரண்டு முறை நடப்புச் சாம்பியனான சபாலெங்காவுடன் மோதலில் ஒரு பெரிய பின்தங்கியவராக இருந்தார்.

எனினும், அவர் பின்னர் தனது சிறப்பான ஆட்டத்தின் மூலமாக 6-3, 2-6, 7-5 என்ற பெலாரஷ் வீராங்கனையை வீழ்த்தி சம்பியன் ஆனமையும் குறிப்பிடத்தக்கது.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 28ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.